Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 337

ஞாயிற்றுக்கிழமை 29 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 12 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# முல்லைத்தீவு புதைகுழி அகழ்வு; அடுத்தமாதமே மீள ஆரம்பமாகும்

முல்லைத்தீவு, ஒக்ரோபர் 29

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் கடந்த மாதம் 15ஆம் திகதியுடன் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது. இந்தப்பணிகள் நாளை 30ஆம் திகதி மீள ஆரம்பமாகும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அடுத்த மாத இறுதி வாரத்தில் அல்லது மூன்றாவது வாரத்திலேயே ஆரம்பிக்கப்படும் சாத்தியப்பாடுகள் இருப்பதாக அறியமுடிகின்றது. »15

## மீண்டும் செல்வந்த வரி

கொழும்பு, ஒக். 29

1992 ஆம் ஆண்டு நீக்கப்பட்ட செல்வந்த வரியை ஓரவு - செலவுத் திட்டம் ஊடாக மீண்டும் நடைமுறைப்படுத்த அரசு தயாராகி வருகின்றது என சிங்கள வார இதழொன்று »15

# பௌத்தர்கள் வாழாத இடத்தில் எதற்கு விகாரை அமைப்பு?

சிங்கள மக்கள் தையிட்டி விகாராதிபதியிடம் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக். 29

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக்கு நேற்றுச் சென்ற சிங்கள சிவில் சமூகத்தவர்கள், பௌத்தர்கள் வாழாத இடங்களில் எதற்காக விகாரை »15

வவுனியா முரண்பாடு

## கைதான 7பேரும் நேற்று விடுவிப்பு

வவுனியா, ஒக். 29

வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி உட்பட 7 பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட நிலையில், நேற்று பிணையில்விடுவிக்கப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். »15

தையிட்டியில்

## விகாரையில் 'பிரித்' ஓதுவதற்கு கோயிலில் பாட்டு இடையூறாம்

மக்களுடன் முரண்பட்ட பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக். 29

தையிட்டியில்சட்டவிரோத திஸ்ஸ விகாரையின் 'பிரித்' ஓதுதலுக்கு, தையிட்டி நாகதம்பிரான் ஆலயத்தில் ஒலிபரப்பப்படும் பக்திப் பாடல்கள் இடையூறாக இருப்பதாகத் தெரிவித்து அதனை நிறுத்துமாறு பொலிஸார் மக்களு »15

## மன்னாரில் இந்திய மீனவர்கள் 25 பேர் 3 படகுகளுடன் கைது

மன்னார், ஒக். 29

தலைமன்னார் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் இராமேஸ்வரம் மீனவர்கள் 25 பேரை மூன்று படகுகளுடன் இலங்கைக் கடற்படை நேற்றுக் கைது செய்துள்ளது.

முன்னதாக நெடுந்தீவு மற்றும் »15

## பாதீட்டுக்கு முன்னர் அமைச்சரவை மாற்றம்?

கதைவிடும் பெரமுன தரப்பு

கொழும்பு, ஒக். 29

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது பொதுஜன பெரமுனக் கட்சியினர் கடும் விமர்சனக் கணைகளைத் தொடுத்துவரும் நிலையில், பாதீட்டுக்கு முன்னதாக அமைச் »15

## 14 வயதுச் சிறுமி வன்புணர்வு: இருவர் சந்தேகத்தில் கைது

முல்லைத்தீவு, ஒக். 29

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 14 வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இருவர் சந்தேகத்தில் கைதாகியுள்ளனர். »15

## காஸாவில் போர்நிறுத்தம்: ஆதரவளித்தது இலங்கை!

மதில்மேல் பூனையாக இந்தியா

கொழும்பு, ஒக். 29

காஸாவில் உடனடியாக மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்று நடைமுறைப்படுத்தவேண்டும் என்று ஐ.நா. பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அதற்கு ஆதர »15

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கனரக வாகனங்களுக்கு பகலில் நேரக்கட்டுப்பாடு

## கிளிநொச்சி அபிவிருத்திக் குழு கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, ஒக்.29

**கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புக் கருதி பாடசாலை நாள்களில் கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு நேரக்கட்டுப்பாட்டை விதிப்பது என்று மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

காலை 7 மணி முதல் 8 மணி வரையும், பிற்பகல் ஒரு மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும் முறிகண்டியில் இருந்து கிளிநொச்சி நகர எல்லை உட்பட பரந்தன் சந்தி வரை டிப்பர் உள்ளிட்ட கனரக வாகனங்களின் போக்குவரத்தை நிறுத்துவது எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நேர எல்லைக்குள் ஏனைய வாகனங்களின் வேக வரம்பை மணிக்கு 40 கி.மீ. ஆகக் குறைக்கவும் முடிவு செய்யப்பட்டதுடன், விதிகளை மீறும் சாரதிகள் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் சூரிய சக்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், மீள்குடியேற்றப்பட்ட மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மின்சாரம், நீர்ப்பாசனம், வீடமைப்பு, கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், எதிர்காலத்தில் அமுல்படுத்த எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் மற்றும் இங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. வடமாகாண ஆளுநர் வடமாகாணத்தில் 25 ஆயிரம் நிரந்தர வீடுகளை நிர்மாணித்தல், சூரிய சக்தி மற்றும் மின்சார உற்பத்தித் திட்டங்கள் உட்பட மக்களுக்குப் பயனளிக்கும் பல திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று குறிப்பிட்டார். (எ-27)

# சாவகச்சேரியில் சிறுவர் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.29

சாவகச்சேரி பிரதேசசபையும் கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியமும் இணைந்து நடத்தும் சிறுவர் தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் ச.சந்திரகுமார், தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-159)

# மணல் கடத்தலை தடுக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.29

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும் மணல் கடத்தல் மற்றும் மரக் கடத்தல் என்பவற்றையும், சட்டவிரோத நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கார்மாநாடு, கல்லாறு, கிளாலி, முரசுமோட்டை, குடமூர்த்தி, உமையாள்புரம் அக்கராயன்குளம் மற்றும் குஞ்சுப்பரந்தன் உட்பட பல பிரதேசங்களில் நடைபெற்று வரும் சட்டவிரோத மணல் கடத்தல் தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காணொலிகள் மற்றும் புகைப்படங்கள் பல காண்பிக்கப்பட்டன.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட பாதுகாப்புத் தரப்பினருக்கு இணைத்தலைவர்கள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். அதேநேரம் பொலிஸ் மற்றும் இராணுவத்தையும், திணைக்களங்களையும் இணைத்து சில வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த வருடம் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட 158 டிப்பர் ரக வாகனங்களும் நூற்றுக்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரச உயர் அதிகாரிகள் சிலர் கூட டிப்பர் வண்டிகளை பயன்படுத்தி மணல் கடத்தலில் ஈடுபடுவது தெரியவந்துள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (எ-27)

# சிறுவனுக்கு மது பருக்கியவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக்.29

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடியில் 10 வயதுச் சிறுவன் ஒருவருக்கு மதுபானம் பருக்கினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் முச்சக்கர வண்டி ஒன்றுக்குள் வைத்து சிறுவனுக்கு மதுபானம் பருக்கியுள்ளார். இது தொடர்பாகச் சிறுவனின் தாய் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் இரவு சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை சிறுவனின் தந்தை வேலை நிமித்தமாக வெளிநாட்டில் வசித்து வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-27)



# "உதய வாழ்வில்" நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், ஒக்.29

'உதய வாழ்வு' நிறுவனத்தின் வட்டுகோட்டை தையல் பயிற்சி நிலையத்தில் நேற்றுக் காலை நவராத்திரி பூஜை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அதில் 'உதய வாழ்வு' தையல் பயிற்சி நிலையத்தின் ஆசிரியர், மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-125)

# கொழும்பில் ஜப்பான் கப்பல்

கொழும்பு, ஒக்.29

ஜப்பான் கடல்சார் தற்காப்புப் படையின் அகேபோனோ கப்பல் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு நேற்றுச் சனிக்கிழமை திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது.

திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள இந்தக் கப்பல் 150.5 மீற்றர் நீளமுடையதாகும். இந்தக் கப்பல் நாட்டில் தங்கியிருக்கும்போது, இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையேயான நட்புறவை மேம்படுத்தும் வகையில் இலங்கைக் கடற்படையால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் பங்கேற்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாட்டிலிருந்து புறப்படவுள்ளது. (எ-இ)

# பாடசாலை தொடங்கும் நேரத்தில் வீதியில் தடுக்கப்படும் டிப்பர்கள்

## மாணவர்களுக்கு இடையூறென பெற்றோர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஒக். 29

பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் நேரத்தில் கிளிநொச்சி ஏ-35 வீதியில் வைத்து டிப்பர்கள் உள்ளிட்ட வாகனங்களை மறித்து பொலிஸார் சோதனைக்குட்படுத்துவதால் மாணவர்கள் போக்குவரத்துச்செய்வதில் இடையூறு ஏற்படுவதுடன் விபத்துகளும் நிகழலாம் என்று பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிளிநொச்சி, முரசுமோட்டை ஏ-35 வீதியருகே அமைந்துள்ள முருகானந்தா கல்லூரி மற்றும் முருகானந்தா ஆரம்ப வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளில் அதிகளவான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

குறித்த பாடசாலைகள் ஆரம்பமாகும் வேளையில் வீதிக் கடமையில் ஈடுபடுகின்ற பொலிஸார் ஏ-35 வீதியால் வரும் டிப்பர் வாகனங்களை தொடராக வழிமறித்து சோதனைக்குட்படுத்துகின்றனர்.

இதனால் மாணவர்கள் போக்குவரத்து செய்வதில் இடைஞ்சல் ஏற்படுவதுடன் எதிரே வரும் வாகனங்களால் விபத்துகளும் நேரிடும் அபாய நிலை காணப்படுகிறது.

எனவே, பிறிதொரு இடத்தில் டிப்பர் வாகனங்களைச் சோதனைக்குட்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து பாடசாலை மாணவர்கள் சிரமமின்றி போக்குவரத்து செய்ய வழிவகுக்கவேண்டும் - என்றனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போராடித்தோற்றது நியூஸிலாந்து

பரபரப்பான ஆட்டத்தில் 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை அவுஸ்திரேலியா வீழ்த்தியது.

தர்மசாலாவில் நடைபெற்ற நேற்றைய ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. முதலில் ஆடிய அவுஸ்திரேலியா 49.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 388 ஓட்டங்களைக் குவித்தது.

அணிக்கு மீண்டும் திரும்பிய ட்ராவிஸ் ஹெட் 67 பந்துகளில் 109 ஓட்டங்களைக் குவித்து மிரட்டினார். டேவிட் வோர்னர் 65 பந்துகளில் 81 ஓட்டங்களைக் குவித்தார். அந்த அணி 11 பந்துப் பரிமாற்றங்களில் 124 ஓட்டங்களை எடுத்து அசத்தலான ஆரம்பத்தைக் கொடுத்தது.

389 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை துரத்திய நியூஸிலாந்து அணிக்கு ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. ஆனாலும் ரச்சின் ரவீந்திரன் டேரில் மிட்செல் கூட்டணி அமைத்து அவுஸ்திரேலிய வீரர்களின் பந்துகளை விளாசினர். மிட்செல் 54 ஓட்டங்களில் ஆட்டமிழக்க பொறுப்புடன் ஆடிய ரச்சின் ரவீந்திரா 77 பந்துகளில் சதமடித்து அசத்தினார். அவரைத் தொடர்ந்து வந்த வீரர்கள் பெரிய அளவில் சோபிக்கவில்லை. இறுதி பந்துப் பரிமாற்றத்தில் ஜேம்ஸ் நீஷம் ட்ரெண்ட் போல் களத்தில் இருக்கும்போது 2 பந்துகளில் 7 ஓட்டங்கள் அடிக்க வேண்டிய பரபரப்பான சூழலில் ஜேம்ஸ் நீஷம் 'ரன்அவுட்' ஆனார். இதனால் பரபரப்பான ஆட்டம் அவுஸ்திரேலிய அணி வசமாகியது. (ஓ.5)



இங்கிலாந்து - இந்தியா அணிகளுக்கிடையிலான இன்றைய (29.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

தினம் ஒரு பரிசு 25

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

# நெதர்லாந்திடம் அடிவாங்கியது பங்களாதேஷ்

பங்களாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் நெதர்லாந்து அணி 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்று, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வென்ற நெதர்லாந்து துடுப்பாட்டத்தை தேர்வு செய்ய அந்த அணிக்கு ஆரம்பம் சரியாக அமையவில்லை. இருப்பினும் வெஸ்லி, பரேசி மற்றும் அணித் தலைவர் ஸ்கொட் எட்வர்ட்ஸ் ஆகியோர் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

எட்வர்ட்ஸ் 68 ஓட்டங்களும், வெஸ்லி பரேசி 41 ஓட்டங்களும் எடுக்க நெதர்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 229 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

230 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ்மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. நெதர்லாந்து வேகப்பந்து வீச்சாளர்கள் போல், வான், மீகெரென் மற்றும் டீபாஸ் டி லீட் ஆகியோரின் பந்துவீச்சில் முன்னணி வீரர்கள் அடுத்தடுத்து வீழ்ந்தனர்.

42.2 பந்துப் பரிமாற்றங்களில் 142 ஓட்டங்களுக்குள் சுருண்டது. நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நெதர்லாந்து பெறும் இரண்டாவது வெற்றி இதுவாகும். (ஓ-5)

இன்றைய ஆட்டம்

இங்கிலாந்து இந்தியா

ECB

இடம் : லக்னோ
நேரம்: பி.ப. 2.00




தினம் ஒரு பரிசு நாள் 23 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| கி.கிசோர்த்தமன் | - வட்டக்கச்சி | பி.துவாரஹன் | - சுண்டுக்குளி |
| செ.பாலசந்திரன் | - சுழிபுரம் | ஏ.சிவானந்தன் | - மன்னார் |
| பி.செல்வி | - யாழ்ப்பாணம் | ஆர்.கிரிதரன் | - சுன்னாகம் |
| ச.வசந்தகுமார் | - நெடுங்கேணி | பொ.சஞ்சிகா | - புதுக்குளம் |
| நா.கொன்சன் | - யாழ்ப்பாணம் | த.கருணியா | - மன்னார் நகர் |
| க.தயாபரன் | - சுழிபுரம் | ம.ஸ்ரெனிஸ் | - இரணைப்பாலை |
| த.மாணிக்கவாசகர் | - யாழ்ப்பாணம் | ஆ.சொரூபா | - விளாங்குளம் |
| சி.சிவஞானம் | - நாவாந்துறை | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு மனு

கொழும்பு, ஒக்.29

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைத்து உத்தரவிடவேண்டும் என்று கோரி மாணவர்கள் குழுவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க கல்வி அமைச்சர் உள்ளிட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகளுக்கு உயர் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி முதல் க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இந்தப் பரீட்சையை ஒத்திவைத்து உத்தரவிடவேண்டும் என்று கோரியே மாணவர்கள் குழு ஒன்றால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் நேற்று முன்தினம் முர்து பெர்னாண்டோ, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரிக்கப்பட்டது. பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், நீதிமன்றில் கோரிக்கை ஒன்றை விடுத்து, இந்த வழக்கு தொடர்பான ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க கால அவகாசம் கோரினார்.

அதையடுத்து எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் குறித்த ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய வேண்டும் என்று பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-இ)

# ௬௮ மில். ரூபா நட்டத்தை ஈடு செய்யப் பணிப்பு!

போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து 68 மில்லியன் ரூபா கடன்களைப் பெற்றுக் கொண்டமையால் அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை கையளிக்கவேண்டும் என்று கோப் குழு வங்கி அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தலைமையில் கடந்தவாரம் கூடிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் தொடர்பான குழுவுக்கு (கோப் குழு) அரச ஈட்டு முதலீட்டு வங்கி அழைக்கப்பட்டிருந்தது.

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் 2020, 2021ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை என்பன ஆராயப்பட்டன. நிதி அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தலைவர், பொது முகாமையாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதற்கு முன்னர் நடைபெற்ற கோப் குழுவில் வழங்கப்பட்ட பரிந்துரைக்கு அமைய முழுமையாகத் தானியங்கி வங்கிக் கட்டமைப்பை உருவாக்குவதில் ஏற்பட்ட காலதாமதம் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. இதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், 2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் அதைப் பூர்த்தி செய்யமுடியும் என்றும் அதிகாரிகள் உறுதியளித்தனர்.

2017ஆம் ஆண்டு, சிலர் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து கடன்களைப் பெற்றதால், வங்கிக்கு ஏற்பட்ட 68 மில்லியன் ரூபா நட்டத்தை ஈடுசெய்ய நடவடிக்கை எடுப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

வங்கியில் பணியாற்றிய சில அதிகாரிகளின் உதவியுடன் கடன்களுக்கு விண்ணப்பித்த 49 பேருக்கு உரிய கடன் தொகையைக் கொடுத்து இந்த மோசடி இடம்பெற்றுள்ளமையும் இங்கு வெளிப்பட்டது. சட்டரீதியாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் பலனாக 8 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது என்றும், எஞ்சியுள்ள தொகையைப் பெற்றுக்கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று 6 வருடங்கள் கடந்துள்ள போதிலும் அதிகாரிகள் தண்டிக்கப்படாததுடன், இந்தப் பணத்தை மீட்பதில் காலதாமதம் ஏற்படுவது குறித்தும் குழு விசேட கவனம் செலுத்தியது. இந்த விடயம் தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கையளிக்க வேண்டும் என்று கோப் குழுவின் தலைவர் இதன்போது அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். (எ-இ)




# அடுத்த மாதத்துக்குள் 4,780 பேருக்கு நியமனம்

அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் 4 ஆயிரத்து 780 பன்முக அபிவிருத்தி உதவியாளர்களை நியமிக்க வேண்டும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற பன்முக அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலிலேயே பிரதமர் தினேஷ் குணவர்த்தன இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

அபிவிருத்தி உதவியாளர்களை நியமிக்கவேண்டும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தபோதும் அவரது உத்தரவு இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அதையடுத்தே பிரதமர் மீண்டும் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார். இவர்கள் பொதுப்பணித்துறையில் உள்ள வெற்றிடங்களுக்கே நியமிக்கப்படுவர். அமைச்சுக்கு நியமிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ‘டக் டிக் டோஸ்’ திரைப்பட இசை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.29

இயக்குநர் ராஜ் சிவராஜ் இயக்கத்தில் பூவன் மதீசனின் இசையமைப்பில் உருவாகியுள்ள ‘டக் டிக் டோஸ்’ முழு நீளத் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதற்கு முன்பு வெளியான ‘புத்தி கெட்ட மனிதர்கள் எல்லாம்’ திரைப்படம் பலரின் பாராட்டுக்களைப் பெற்று வணிக ரீதியாக பெரு வெற்றிபெற்றது.

இந்தநிலையில் அவர்களின் கூட்டணியில் மீண்டும் ‘டக் டிக் டோஸ்’ முழுநீள திரைப்படம் மிக விரைவில் திரைக்கு வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-26)



புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் வாணிவிழா அண்மையில் கொண்டாடப்பட்டது. இதன்போது நவராத்திரியை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் வழங்கல், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (ச)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை வியாபாரிகளை மீட்க 'செய் அல்லது செத்து மடி'

## வெளியாகும் பரபரப்புத் தகவல்கள்

**கொழும்பு, ஒக். 29**

**குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து நிழல் உலக தாதாக்களான 'ஹரக்கட்டா' மற்றும் 'குடு சலிது' ஆகியோரை மீட்பதற்கான திட்டத்துக்கு "Do or Die" (செய் அல்லது செத்துமடி) என குறித்த பெயர் சூட்டப்பட்டிருந்தது என்பது தற்போது தெரியவந்துள்ளது.**

100 கோடி ரூபா ஒப்பந்தமொன்றின் அடிப்படையிலேயே இதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 'ஹரக்கட்டா', 'குடுசலிது' ஆகியோரை மீட்பதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மீது 'கொரில்லா' தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது என வெளியாகியுள்ள தகவல் இலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பான தாக்குதல் திட்டத்தை வகுத்த முன்னாள் இராணுவ கொமாண்டோக்கள் இருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த இரு சந்தேகநபர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடத்துக்குள் நுழைந்து 'இரசாயன' தாக்குதலை நடத்தி அவர்களை மீட்டுச் செல்லத் திட்டமிடப்பட்டிருந்தது எனவும், இராணுவ கொமாண்டோ உடையில் சி.ஐ.டி.க்குள் நுழைந்தே தாக்குதல் நடத்தப்படவிருந்தது எனவும் இவர்கள் கூறியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

குற்றப்புலனாய்வுப் பிரிவு வளாகத்தில் உள்ள பாதுகாப்புத் தரப்புகள் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு, 'ஹரக்கட்டா', 'குடு சலிது' ஆகிய இருவருக்கும் இராணுவ கொமாண்டோ ஆடை அணிவித்துவிட்டே அவர்களை மீட்டுச் செல்ல வியூகம் வகுக்கப்பட்டது எனவும், இதற்காக கொமாண்டோ பயிற்சி பெற்றவர்களை ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பில் சி.ஐ.டி.யினர் கொழும்பு கோட்டை நீதிமன்றத்துக்கு கடந்த 24 ஆம் திகதி தெரியப்படுத்தியுள்ளனர். இதுதொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று கோட்டை நீதிவான் திலிக கமகே, குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் கொமாண்டோக்களிடம் விரிவான விசாரணை நடத்தப்பட்டுவருகின்றது. மேலும் பல தகவல்களும் வெளிவந்துள்ளன.

தாக்குதலின்போது தாம் உயிரிழந்தால் தமது குடும்ப உறுப்பினர்களுக்கு எவ்வாறு உதவவேண்டும் என்பது உட்பட மேலும் சில இணக்கப்பாடுகளை குற்றச்செயலில் ஈடுபடவிருந்தவர்கள், ஒப்பந்தக்காரர்களுடன் ஏற்படுத்திக்கொண்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

நவீன தொலைத்தொடர்புச் சாதனம் ஊடாக வெளிநாட்டில் உள்ள குற்றவாளிகளுடனும் பேசப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் தகவல்களை அடுத்து தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (எ-44)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**இடபம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** சாதிக்கவேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளில் நன்றாக சிந்தித்து செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**சிம்மம்:** சிந்தித்து செயல்படவேண்டிய நாள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வீண் செலவுகளால் கையிருப்பு கரையும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மூன்றாவது நபர்களின் தலையீட்டைத் தவிர்க்கவும். முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**விருச்சிகம்:** மனதில் தெளிவாகச் சிந்திக்கும் திறன் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு குடும்பத்துடன் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர் கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். உறவினர்களால் செலவுகள் ஏற்படலாம். மகிழ்ச்சியே உண்டாகும். காரியங்கள் இழுபறியாகும்.

**கும்பம்:** பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதை தவிர்த்துவிடவும்.

**மீனம்:** சொல்லிலும் செயலிலும் பொறுமை தேவைப்படும் நாள். தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

# பெரியபுராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 29

சைவ வாழ்வியலில் பெரியபுராண முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிறப்புச் சொற்பொழிவு சாவற்கட்டு ஆனைக்கோட்டை அந்திக்குழி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் காளி அம்பாள் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறும் இந்த நிகழ்வில் 'ஆண்டுக்கொரு மந்திரம் அருளிய நாயனார்' எனும் விடயப்பொருளில் சைவப்புலவர் பொன்.சந்திரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச)

# பச்சிலைப்பள்ளியில் குருதித்தான முகாம்

கிளிநொச்சி, ஒக்.29



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இணைந்து நடத்திய குருதிக்கொடை முகாம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த குருதிக்கொடை முகாம் ஒழுங்கமைக்கப்பட்டது.

முகாமில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் பங்கேற்று குருதிக்கொடையளித்தனர். (ச-113)

# விசேட உரை

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் "மாக்சிசமும் இலக்கியத் திறனாய்வும் " எனும் தலைப்பில் விசேட உரையும் கலந்துரையாடலும் கொக்குவிலிலுள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

நிகழ்வில் தமிழ்நாடு காந்தி கிராமம் கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக தமிழ்த் துறை பேராசிரியர் பா. ஆனந்த குமார் விசேட உரையை நிகழ்த்தவுள்ளார். (ச)

# இலவச மருத்துவமுகாம் இன்று நாவற்குழியில்



யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், யாழ்ப்பாண நீரிழிவு சங்கம் மற்றும் இணுவில் நிறை வாழ்வு மையம் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி 300 வீட்டுத்திட்ட சான்றோர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது உடல்திணிவுச் சுட்டி மதிப்பீடு, குருதி குளுக்கோஸ் மட்ட பரிசோதனை, கண்பரிசோதனை, மருத்துவப் பரிசோதனையும் ஆலோசனையும், மருந்து விநியோகம், சுகாதார கல்வியூட்டல், உளவள ஆலோசனை, சிறுதானியங்கள் பற்றிய விழிப்புணர்வு என்பன வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நலங்கெட்டுப் போகும் நல்லதோர் வீணை

தமிழர் தாயகத்தில் இறுதிப்போரோடு எல்லாம் முடிவுக்கு வந்துவிடவில்லை. ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டாலும்கூட, அதன்பின்னர்தான் பல புதிய பிரச்சினைகளைத் தமிழர் தரப்பு எதிர்கொள்ள நேர்ந்தது. அவற்றுள் தலையாய பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்தான். போரின் இறுதிநாள்களில் படையினரிடம் சரணடைந்தோர், உறவினர்களால் படையதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டோர், புலிகள் என்ற சந்தேகத்தில் அல்லது காட்டிக்கொடுப்பட்டு இராணுவத்தால் பிடிக்கப்பட்டோர் என நூற்றுக்கணக்கானோர் பற்றிய விவரங்கள் எதுவும் கடந்த 14 வருடங்களாக வெளிவரவேயில்லை. தங்கள் கண்முன்னால் படைத்தரப்பு பிடித்து சென்றோரின் கதி என்ன என்பதை அறிய அவர்களின் உறவுகள் போகாத இடமில்லை, ஏறாத அலுவலகமில்லை, சாட்சியமளிக்காத ஆணைக்குழுக்கள் இல்லை. என்ன செய்தாலும் பயன் , பூச்சியம் தான். அதைவிட அவர்கள் தனித்தனியாக இருந்ததால் படைத்தரப்பின் மிரட்டல்களையும், கெடுபிடிகளையும் சந்திக்கவேண்டியுமிருந்தது.

இந்தநிலையில்தான் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஒருமுடிவை எடுத்தார்கள். 'தனித்தனியே சென்று உறவுகளைத் தேடுவதைவிட,பாதிக்கப்பட்ட எல்லோரும் ஒன்றிணைந்து போராடுவதன் ஊடாகவே உண்மையை வெளிக்கொணர முடியும்' என்று நம்பினார்கள். 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'. உதிரிகளாக ஒவ்வொரு ஊர்களிலும் தங்கள் உறவுகளைத் தேடி கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து திரிந்தவர்கள், அமைப்புகளாகினர். ஒவ்வொரு மாவட்டத்திலும் நிரந்தரமாக நின்று போராடத் தொடங்கினர். கூட்டாகச் சென்று தங்கள் உறவுகளின் கதி என்ன என்று குரல் கொடுத்தார்கள். இந்தப் போராட்டத்தை அரசாங்கம் பெரிதாகக் கண்டுகொள்ளாதது போன்று நடித்தாலும், உண்மையில் ஆட்சியாளர்களுக்கு இவர்களின் போராட்டம் என்பது தொண்டையில் சிக்கிய முள்ளாக எப்போது உறுத்திக்கொண்டிருக்கவே செய்தது.

ஆனால், யார் கண்பட்டதோ தெரியவில்லை, இந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்குள் பதவிப்பிரச்சினை தலையெடுத்தது. அதைவிட புலம்பெயரிகள், உள்ளூர் அரசியல் கட்சிகள் என்பனவும் இந்தப் பிரிவினையை இன்னும் பெரிதாக எரியவைத்துக் குளிர்காய்ந்தார்கள். எவரினதோ பகடைக்காய்களாகப் தாம் பயன்படுத்தப்படுவதை உணராத காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமக்குள்ளே முரண்படத் தொடங்கினர். சங்கங்கள் பல கூறுகளாக உடைந்தன. இவை வெறுமனே சங்கங்களோடு நின்றுவிடாமல் , பொது வெளியில் நிகழும் போராட்டங்களிலும் பட்டவர்த்தனமாக வெளிப்பட்டன. அண்மையில்கூட முல்லைத்தீவில் நடைபெற்ற போராட்டமொன்றில், 'போராட்டப்பிரகடனத்தை யார் வாசிப்பது?' என்பதற்குக்கூட இந்தக் காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பினர் இருவேறு அணிகளாக நின்று, எல்லோர் முன்னிலையிலும் தெருச்சண்டித்தனத்தில் இறங்கியிருந்தனர். இதன் உச்சக்கட்டமாகத்தான் வவுனியால் நடந்த நிகழ்வு அமைந்திருக்கிறது.

ஏற்கனவே இந்தக் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்கள் வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்களின்கீழ் இயங்குகின்றன என்ற குற்றச்சாட்டுகளை மெய்ப்பிப்பது போன்று, பதவிப் பிரச்சினைக்காக இவர்கள் முட்டி மோதிக் கொண்ட விவகாரம், பொலிஸாரால் கைது செய்யப்படுமளவுக்கு எல்லைமீறியுள்ளது. வழக்கமாக காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்துக்குத் தடை வாங்குவதுதான் பொலிஸாரின் வேலையாக இருக்கும். அரசாங்கத்தின் எந்த அமைப்பு தங்களின் போராட்டங்களை நசுக்குவதில் முனைப்பாக நிற்கின்றதோ, அதே பொலிஸாரிடம் தங்கள் உள்வீட்டுப் பிரச்சினையை முறையிடுமளவுக்கு, காணாமற்போனோர் விவகாரத்தை இந்த அமைப்புகள் 'பரிசுகேடு ' செய்திருக்கிறார்கள். எதை ஆட்சியாளர்கள் விரும்புகிறார்களோ அதனை நாங்களே செய்து, நமது பிரச்சினையத்தீர்ப்பதற்குப் பதிலாக இன்னும் முரண்பாடுகளை வளர்ப்பதும், பதவிக்காகக் கன்னைபிரிந்து களமாடுவதும் ஆரோக்கியமானதல்ல. கூடவே காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டம் தொடர்பான பொதுமக்களின் எண்ணப்பாங்கிலும் எதிர்மறையான பார்வை வெளிப்படும் அபாயமும் உண்டு.

**எந்த நோக்கத்துக்காக இந்தச் சங்கங்கள் உருவாகினவோ அதைவிடுத்து, சராசரி அரசியல் கட்சிகள் போல பகிரங்க வெளியில் மல்லுக்கட்டுவதென்பது , காணாமல் ஆக்கப்பட்டோருக்குச் செய்யும் துரோகமேயன்றி வேறில்லை. நலதோர் வீணை செய்து அதனை நலங்கெட நாமே புழுதியில் எறிந்து கொண்டிருக்கிறோமோ...?**

### நாளொரு நல்வார்த்தை

**தன் அச்சத்தில் இருந்து மீண்டு வருபவன் தான் உண்மையிலே சுதந்திரமானவன்.**

**-அரிஸ்ரோட்டில்-**




# நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவது சவால்

## சபாநாயகர் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.29**

**உலகில் தற்போது காணப்படும் சூழ்நிலையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு சவாலானதாக மாறியுள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.**

அங்கோலா நாட்டின் லுவாண்டா நகரில் நடைபெறும் அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் 147ஆவது மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உலகம் முன்னெப்போதும் இல்லாத அளவு சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. கொரோனாத் தொற்று மற்றும் அதன் விளைவுகள், இயற்கை அழிவுகளால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் அதிகரித்துவரும் மோதல்களால் மனித சமூகத்துக்கும், கிரகத்துக்கும் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் இந்த நிலைமை தோன்றியுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத பூகோள சவால்களுக்கு மத்தியில் இலங்கை கடந்த ஆண்டு மிகவும் சவாலான காலகட்டத்தைச் சந்தித்துள்ளது. பரவியுள்ள சமூக அமைதியின்மை மற்றும் எதிர்பார்ப்புகளால் ஏற்பட்ட சவால்களை வெற்றிகொள்ளும் செயற்பாட்டில் இலங்கையில் ஜனநாயக நிறுவனங்களை உறுதியாக முன்னெடுத்துச் சென்று அரசாங்கமும், பொதுமக்களும் அமைதியான அரசியல் மாற்றம் ஒன்றை நோக்கிப் பயணிக்கின்றனர் - என்றார். (எ-இ)

# வரியில்லா வர்த்தகம் வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஒக்.29

கொழும்புத் துறைமுக நகரத்தில் சுங்க வரியில்லா சில்லறை வர்த்தகம் அல்லது சுங்க வரியில்லா வணிக வளாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தேவைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் குறித்த தேவைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு முதலீட்டாளர் ஒரு சுங்க வரியில்லா சில்லறை வர்த்தகத்தை நடத்த குறைந்தபட்சம் 5 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்யவேண்டும். இந்த முதலீட்டாளருக்கு சுங்க வரியில்லா வர்த்தக நடவடிக்கைகளில் உலகளாவிய அனுபவமும் இருக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சுங்க வரியில்லா வணிக வளாக வர்த்தகத்தை நடத்துவதற்கு, ஒரு முதலீட்டாளர் குறைந்தபட்சம் 7 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்யவேண்டும் என்றும் குறித்த வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

**நாளை** 30.10.2023 திங்கட்கிழமை ஐப்பசி 13

சுபநேரம் : 12.03 - 01.33

ராகுகாலம் : 07.33 - 09.03

கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கு ஆதரவு பெரமுன குழப்பம்

கொழும்பு, ஒக். 29

**அடுத்த ஜனாதிபதித்தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் எமது கட்சி இன்னும் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.**

மொட்டுக் கட்சியின் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் ,

அடுத்த ஜனாதிபதித்தேர்தல் வேட்பாளர் தொடர்பில் கட்சியில் உள்ள சிலர் தனிப்பட்ட ரீதியில் கருத்துகளை வெளியிட்டுவந்தாலும் கட்சி என்ற வகையில் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவை கோத்தாபய ராஜபக்சவே பிரதமராக்கினார். அவரை ஜனாதிபதி ஆக்குவதற்கு எமது கட்சி நாடாளுமன்றத்தில் ஆதரவை வெளிப்படுத்தியது. அடுத்த ஜனாதிபதித்தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் இன்னமும் முடிவெடுக்கவில்லை - என்றார். (ச-இ)

## பலவந்த ஆட்சி தோன்றின் அராஜகம் தோற்றம்பெறும்

ஜே.வி.பி. எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 29

ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து அடுத்தவருடம் ஜனாதிபதித்தேர்தலை நடத்தாது பலவந்தமாக ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள இந்த அரசாங்கம் நகர்வுகளை முன்னெடுக்கிறது. இவ்வாறு செயற்பட முற்பட்டால் நாட்டில் அராஜக நிலையே தோற்றம்பெறும்.

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் தற்போது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. வங்குரோத்து நிலையிலிருந்து நாடு மீளவில்லை. பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டு மக்கள் வாழ முடியாத நிலை தோற்றம் பெற்றுள்ளது.

தற்போது தேர்தல் நடத்தப்பட்டால் ஆட்சியைத் தக்கவைக்கமுடியாது என்பது ரணில் தரப்புக்குத் தெரியும். அதனால் பலவந்தமாக ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அடுத்தவருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாது, ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்த உத்தேசிக்கப்பட்டது. இதனைச் செய்வதாக இருந்தால் நாடாளுமன்றத்தில் முதலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு அவசியம். தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்றத்தில் அரசுக்கு மூன்றிலிரண்டு பலம் இல்லை. எனவே, அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியாக வேண்டும். பலவந்தமாக ஆட்சியை தக்கவைக்க முயற்சி எடுக்கப்பட்டால் நாட்டில் அராஜகங்களே வெடிக்கும்- என்றார். (ச-44)

## கல்லுண்டாய்க் குடியிருப்பு காணிப்பத்திரம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

சண்டிலிப்பாய்ப் பிரதேசசெயலகத்துக்குட்பட்ட கல்லுண்டாய்வெளி குடியிருப்புத்திட்ட மக்களுக்கான காணி உரிமைப்பத்திரம் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கல்லுண்டாயில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அலுவலகத்தில் வைத்து அவற்றைக் கையளித்தார்.

இதன்போது நவாலி கிழக்கு மற்றும் மேற்கு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 54 குடும்பங்களுக்கான காணி உரிமப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் சிவபாலசுந்தரன், காணி மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகன், மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயந்தன் குணதிலக மற்றும் துறைசார் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-20-27)



சர்வதேச வறுமை ஒழிப்பு வாரத்தில் ஆனைக்கோட்டை கிராமஅலுவலர் பிரிவுக்குட்பட்ட சமூர்த்திப் பயனாளிகளால் ஆதவன் முன்பள்ளி வளாகத்தில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. (ச-66)

உரும்பிராய் தெற்கு செல்வபுரம் கிராமத்தின் கிராமிய உழைப்பாளர் சங்க கிளை நிர்வாகச் செயற்பாட்டின் 17 ஆவது ஆண்டு விழாவும் மலையக மக்களின் 200 ஆவது ஆண்டு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை உதயபுரம் உதயசூரியன் சனசமூக நிலைய கலையரங்கில் இடம்பெற்றன. (ச-66)



கிளிநொச்சி மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்ட உப்புல செனவரத்தினவின் பதவியேற்பு கடந்த 12ஆம் திகதி வியாழக்கிழமை இரணைமடுவில் அமைந்துள்ள பிரதிப்பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது. (ய-113)



## மின்சாரசபையின் குருதிக்கொடை!

யாழ்ப்பாணம், ஒக். 29

இலங்கை மின்சாரசபையின் 54ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் எதிர்வரும் நவம்பர் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடையாளர்கள், ஆர்வலர்கள் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ரி)





கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலை அங்குரார்ப்பண நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவகுலம் 1998,உத்தராடம் Research Officer,Canada மணமகளுக்கு மணமகன் தேவை.

Tel : 0772321404 | 0777751380

No.14 3/1G,37th Lane,Colombo-06.

www.realmatrimony.com

## வீடு வாடகைக்கு

இருபாலை சந்திக்கு அண்மையில் 4 அறை கொண்ட வீடு வாடகைக்குண்டு.

077 601 1135

## வீடு விற்பனைக்கு

கொழும்பு வெள்ளவத்தை ஆதுசா வீதியில் அமைந்துள்ள 3 அறைகள் கொண்ட தொடர்மாடி வீடு விற்பனைக்குண்டு.

077 601 1135

## மாத தவணை அடிப்படையில் வீடு விற்பனைக்குண்டு

வெள்ளவத்தையில் Airpico சுப்பர் மாகட் அருகாமையில் 1150sqr கொண்ட 3Bedrooms Apartment இலகு மாத தவணை அடிப்படையில் விற்பனைக்குண்டு தரகர் வேண்டாம்

076-7354999

## மணமகன் தேவை

ஆவிக்குரிய சபையை சேர்ந்த 1984 ல் பிறந்த, அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் கணக்காளராக பணிபுரியும் மகளுக்கு பெற்றோர் மணமகனை தேடுகின்றனர். ஆவிக்குரிய சபையைச் சேர்ந்தவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

077 541 3139, 077 071 1099

## மணமகன் தேவை

1991ம் ஆண்டு பிறந்த ரோகிணி நட்சத்திரம் உடைய IT துறையில் வேலை பார்க்கும் மணமகளுக்கு மணமகன் தேவை.

076 537 2060

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் 1996,அஸ்வினி Engineer,Canada மணமகனுக்கு மணமகள் தேவை.

Tel : 0772321404 | 0777751380

No.14 3/1G,37th Lane,Colombo-06.

www.realmatrimony.com

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் 1990,பரணி Engineer,Singapore மணமகனுக்கு மணமகள் தேவை.

Tel : 0772321404 | 0777751380

No.14 3/1G,37th Lane,Colombo-06.

www.realmatrimony.com

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணம் கைதடி, குருநகர்.

OIC - 1300/-

JSO - 1200/-

தொடர்பு : 075 363 2025

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியிலிருந்து 50m தூரத்தில் நோதேன் சென்றல் தனியார் வைத்தியசாலைக்கு மிக அண்மையில் 12 அடி பாதையுடன் கூடிய 1 ¾ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

077 361 4630

## மணமகள் தேவை

1982ல் யாழில் பிறந்து தற்போது கொழும்பில் தொழில்புரியும் ரோமன் கத்தோலிக்க மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

076 041 0334

## தேவை

கொழும்பு தெஹிவளையில் ஒரு சிறு குடும்பத்திற்கு வீட்டில் தங்கியிருந்து வீட்டு மற்றும் சமையல் வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

072 339 7399

## WANTED

Secretary Cum Coordinator (Female) Permanent Carder for a Reputed Company in Srilanka (Jaffna)

**Requirements :**

- Good in English and Computer Literacy
- Knowledge in Sinhala will be helpful

Sent CV : 077 638 7948

For Inquiries 077 6387948

## துபாய் (DUBAI) வேலைவாய்ப்பு



| தொழில்வாய்ப்பு(Non Domestic) | | எண்ணிக்கை | சம்பளம் Basic Salary (DHS) |
|---|---|---|---|
| சுத்திகரிப்பாளர்/ பணியாட்கள் CLEANERS / MESSENGERS | ஆண் | 50 | DHS 906 |
| சுத்திகரிப்பாளர்/ பணியாட்கள் CLEANERS / MESSENGERS | பெண் | 50 | DHS 1006 |
| உதவியாளர்கள்/ பணியாட்கள் GENERAL HELPER / MESSENGERS | ஆண் | 50 | DHS 906 |

(Subjects to change according to the exchange rate) 1HDS = Rs. 88.84

AL 2260/Advt: 02/23

**விதிமுறைகள் & நிபந்தனை:-**

- உணவு, தங்குமிடம், போக்குவரத்து , மருத்துவ வசதி இலவசம்
- 2 வருட ஒப்பந்த காலத்துடன் 6 மாத தகுதிகாண் காலம்
- வேலை நாளொன்றுக்கு 8 மணித்தியாலம் மற்றும் 8 மணித்தியால கட்டாய மேலதிக வேலை நேரம், வாரத்திற்கு 6 நாட்கள் 48 மணித்தியாலம்
- புறப்படுவதற்கும், ஒப்பந்தகாலம் பூர்த்தியாகி நாடுதிரும்ப விமான டிக்கட் இலவசம்
- ஏனைய அனைத்து விதிமுறைகள் & நிபந்தனைகள் துபாய் தொழிலாளர் சட்டத்திற்கு உட்பட்டது.

*IMMEDIATE INTERVIEWS WITH FOREIGN PRINCIPALS*

உங்கள் விண்ணப்பப்படிவத்தை (CV) உடன் அனுப்பிவையுங்கள்

cv@jobenvoy.com OR அழையுங்கள் 0770 884 809

0777 321 400 ( WhatsApp)

அரச அனுமதிக்கட்டணம் 204893

JOBENVOY.COM (PVT) LTD

LEVEL 06, EAST TOWER, WORLD TRADE CENTER, COLOMBO 01

TEL : 011 388 655 I FAX : 011 388 656

EMAIL : INFO@JOBENVOY.COM I WEB : WWW.JOBENVOY.COM

License No : 2260

## வெளிநாட்டில் உயர்கல்வி

London I Canada I Italy I Malta I Germany

Paris ( France) I Hungary I Latvia I Lithuania

போன்ற நாடுகளில் மிக துரித கதியில் வெளிநாடு சென்று பட்டப்படிப்பினைத்தொடர எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

3 வாரங்களில் வீசாக்கள்

Family & Single Visit Visaவுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

CARE HOME , HEALTH CARE பதவிக்கு தகுதி உள்ளவர்கள் உடன் விண்பிக்கவும்.

## CROATIA STUDY VISA

- Tution fees -4000-5000euro
- IELTS தேவை இல்லை (No IELTS)

O/L, A/L சித்தியுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்

October Intake க்கிற்கான பதிவுகள் ஆரம்பம்.

Work Permit & Settlement — Opportunities After Studies

American College of Applied Studies Pvt Ltd

அழையுங்கள்:

0771828215 I 0759571203

UTE CAT

www.ute.lk

## BE A PART OF A WORLD-CLASS TEAM

With 76 years of experience and competency, a portfolio of world renowned brands, over 340 employees and island-wide presence, UTE is definitely a big league player in the construction industry.

With a firm commitment to continually add value to our customers, we provide profound standards in the service along the journey that continues long after the sale. We represent world's leading brands of Construction Machinery, Power, Renewable Energy, Warehouse & Logistics Solutions, Welding Equipment, and Industrial & Engineering Solutions. Among them is our flagship brand, Caterpillar® for which we have been the sole agent in Sri Lanka since its introduction to the island.

As we expand our operations, the company is seeking to recruit the right individual to join our team.

## SALES EXECUTIVE (Northern Region)

**Requirement:**

- Possess a minimum of two years' of experience in sales or similar position.
- Possess good interpersonal skills to develop and maintain long-term relationships with customers.
- Have the ability to generate new business and achieve targets/deadlines
- Possess strong negotiating skills with excellent communication skills in English & Tamil
- Be willing to work long hours and travel extensively when necessary
- Possess a valid motorcycle riding license

**Preference will be given to candidates residing in Northern Province.**

If you think you have what it takes to be a part of our world-class team, we invite you to submit your application with the contact details of two non-related referees to **vacancy@utequip.com**

Only short-listed candidates will be notified

Head of Human Resources

UTE

683, Negombo Road, Mabole, Wattala. Fax: 2931550

AJAX | bohler | RAYMOND | CAT Lift Trucks | CIGWELD | DEXION | ENERPAC | Fuji Electric | CURTIS Air Compressors | JLG | SEM | SMA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னாரில் இருக்கும்
எமது நளின் நிறுவனத்தின் கிளைக்கான வேலைவாய்ப்பு

- **Marketing Manager**
  (IT Field )
  யாழ்ப்பாணம் - 1 பேர்
  Basic Salary Rs. 75,000/
  (Commission Based)
  Experience 5 Years
- **Showroom Assistants**
  யாழ்ப்பாணம் - 3 பேர்
  கிளிநொச்சி - 2 பேர்
  மன்னார் - 2 பேர்
  Basic Salary Rs. 28,000/-
- **Service Centre Assistants**
  யாழ்ப்பாணம் - 3 பேர்
  கிளிநொச்சி - 2 பேர்
  மன்னார் - 2 பேர்
  Basic Salary Rs. 30,000/-
- **Trainee CCTv Technicians**
  All Location
  Salary Rs. 20,000/-
- **Driver**
  யாழ்ப்பாணம் - 2 பேர்
  Salary Rs. 40,000/-




கணினிசார் அறிவு மற்றும் குறித்த துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (Driving Licence is Compulsory)

தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ உங்கள் விண்ணப்பங்களை அனுப்புங்கள்.

மேலும் EPF, ETF வழங்கப்படும்.
தங்களது தகுதிக் கேற்ற வேதனம் வழங்கப்படும்.
தங்களது விண்ணப்பங்களை 05.11.2023 இற்கு முன்பு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தபால் மூலம்
194/2 பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North

Email – info@nit.lk
Contact No - 021 222 1121
077 542 7426



# காணி தேவை
## யாழ்ப்பாணம்

வீட்டு திட்டத்திற்காக உடனடி பணம் செலுத்தி வாங்க 60 பரப்பளவிற்கு மேல் ஒரு காணி தேவை

**Vajira House Company**
**071 593 3299**

1916 ம் ஆண்டு தொடக்கம், 107 வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிர்மாண துறையின்
**வஜிரா ஹவுஸ் நிறுவனம்**
23, டீல் பிளேஸ் A, கொள்ளுபிட்டி



## வீடு வாடகைக்கு

வீடுகள், படிக்கும் மாணவர்களுக்கான அறைகள், களஞ்சியசாலைகள் மற்றும் நாளாந்த, வாராந்த சுற்றுலாவிகளுக்கான நவீன அறைகள் எம்மிடம் உண்டு
077 3450039
075 3480072

## அறைகள் வாடகைக்குண்டு / தேவை

* யாழ். சுண்டுக்குளியில் அறைகள் வாடகைக்கு உண்டு.
* சமையல் வேலை தெரிந்தவர்கள் தேவை.

0777 24 24 27, 0777 41 27 13

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம்1993,திருவோணம் Quantity Surveyor,UK மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0772321404 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 40 வயது திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை சீதனம் எதிர்பார்ப்பில்லை.
தொடர்பு: 077 905 8615

## மரத்தூள் இலவச விநியோகம்

மரத்தூசு தேவையானவர்கள் எம்மிடம் தொடர்புகொள்ளலாம் (இலவசம்)
தொடர்பு: 077 917 7281



## கூறுவிலை கோரல்
## கண்டாவளை பருமன் குறைந்த மணல் (பூச்சு மணலை ஒத்தது)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் வீதிக்கு மணல் இடுவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

ஒரு உழவு இயந்திரம் (ரைக்ரர்) ஆலயம் வரை கொண்டு வந்து சேர்ப்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. தாங்கள் சுயமாக கூறுவிலையினை தயாரித்து பூரணப் படுத்தி 2023.11.05 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி **"செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு"** எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது கோயில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

ந.மோகனரூபன்
செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(CR 40862) A-1




## விஜயதசமியும் பரிசில் நிகழ்வும்

மன்னார், ஒக். 29

நவராத்திரி விழாவை முன்னிட்டு மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கம் மாணவர்களுக்கு இடையே நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் விஜயதசமி நிகழ்வும் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் வியாழக்கி ழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெற்றது. பாலர் பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என வகைப்படுத்தி பண்ணிசை, பேச்சு, வினாவிடை உள்ளிட்ட போட்டிகள் மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

(ச-60)


# மரண அறிவித்தல்



பிறப்பு 06 • 07 • 1948
இறப்பு 26 • 10 • 2023

திருமதி
## சரஸ்வதி சிவகுருநாதன்

அராலி வடக்கினை பிறப்பிடமாகவும், நல்லூர் வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவகுருநாதன் நேற்றுமுன்தினம் (26.10.2023) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகரட்ணம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், க.சிவகுருநாதன் (ஓய்வு பெற்ற முகாமைத்துவ பீடாதிபதி, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்) அவர்களின் பாசமிகு மனைவியும், ஹரிகரன், தேஜோமயானந்தா, ஷாலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தியானா, மயூரி, திஷிகேஷன் ஆகியோரின் மாமியாரும், ஷியாமளன், ஷாத்வீகன், அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற இராஜேந்திரன், இராசையா, இந்திரன், காலஞ்சென்ற சகுந்தலா ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல.12, வைமன் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

இல.12, வைமன் வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 220 3051

(cs.52635 (AK - 1)



# SHANTHIHAM
Association for Health & Counselling
AHC

# விசேட பொதுக்கூட்ட அறிவிப்பு
# Association for Health and Counseling - சாந்திகம்

**Association for Health and Counseling- சாந்திகம் நிறுவனத்தின் விசேட பொதுக்கூட்டம், ஞாயிற்றுக்கிழமை, 12.11.2023 ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு சாந்திகம் பிரதான மண்டபத்தில் நடைபெறும்** என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. Association for Health and Counseling - சாந்திகம் 31 ம் இலக்க 1980 ம் ஆண்டின் சமூக சேவைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பதிவு சட்டத்தின் 8ம் இலக்க 1998 ம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

கடந்த 01.10.2023ம் திகதி அன்று நடைபெற்ற முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் இந்நிறுவனத்தினை உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 34 இன் கீழ் பதிவு செய்துகொள்வது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சாந்திகத்தின் எதிர்காலம், நிலைத்தன்மை மற்றும் அதன் நோக்கத்தை நிறைவேற்றுதல் அதன் தொடர்ச்சியான செயல்திறன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நிர்வாகக் குழு உறுப்பினர்களால் இந்த முடிவு கவனமாக விவாதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே, எங்கள் மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் ஆக்க பூர்வமான கலந்துரையாடலின் பின்னர் ஒரு தீர்மானமாக நிறைவேற்றப்பட வேண்டும். எனவே 12.11.2023 அன்று நடைபெறும் இந்த சிறப்புக் கூட்டத்தில் எந்தவித தாமதமும் இன்றி கலந்துகொள்ளுமாறு எங்கள் உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**செயலாளர்**
**முகாமைத்துவ சபை,**
**No. 8/1, கற்பகவிநாயகர் வீதி,**
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(ct.40860) (N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 28 . 08 . 1951

மறைவு 09 . 11 . 2022

### நயினார் சிலுவைச்சிஅம்மா
(சிலுவேஸ்திரி)

கண்ணிமைத்து
விழிக்கவில்லை
ஆண்டொன்று சென்று விட்டதம்மா
ஒரு நொடிப்பொழுதும்
அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம்
எம்மை விட்டு...

குடும்பத்தினர்.

(CS 26745) A-1


## மணமகள் தேவை

1. இணுவில். இந்து. கௌரவகுலம் (V). 1990. அனுசம். Quantity Surveyor, அவுஸ்ரேலியா மணமகனுக்கு மணமகள் தேவை.
2. சுதுமலை. இந்து. கௌரவகுலம் (V). 1975. மிருகசீரிடம். BA, Graduate, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
3. தெல்லிப்பளை. இந்து. கௌரவகுலம் (V). 1988. உத்தரம். BSc., Civil Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
4. இளவாலை. இந்து. கௌரவகுலம் (V). 1975. அனுசம். Diploma, Divorced, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
5. சங்கானை. இந்து. கௌரவகுலம் (K). 1992. விசாகம். BA (Hons), Accountant, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
6. மயிலிட்டி. இந்து. குருகுலம். 1981. அத்தம். Accountant, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
7. மல்லாகம். இந்து. கௌரவகுலம். (K). 1986. மிருகசீரிடம். Degree in Business Administration, UK. மணமகனுக்கு மணமகள் தேவை.
8. யாழ். இந்து. கௌரவகுலம். (V). 1986. மகம். BSc, MSc, UK, மணமகனுக்கு மணமகள் தேவை.
9. மானிப்பாய். இந்து. கௌரவகுலம். (V). 1986. திருவாதிரை. Quantity Surveyor, Newzealand, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
10. சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம். (V). 1984. ரேவதி. MBBS Doctor, Dentist, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
11. பளை. இந்து. கௌரவகுலம். (V). 1984. அவிட்டம். Phd, Divorce, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
12. கோப்பாய். இந்து. கௌரவகுலம். (V). 1984. சதயம். MBBS Doctor, Ireland Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728


## வலி.வடக்கு சாதனை

புகைத்தல் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் சமுர்த்தி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட விசேட கொடித்தின மற்றும்சேமிப்பு வாரத்தை முன்னிட்டு வலி.வடக்கு பிரதேச செயலகம் மாவட்ட மற்றும் தேசிய நிலைகளில் வெற்றியீட்டிச் சாதனை படைத்துள்ளது.


கடந்த 31ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட சேமிப்பில் வலி. வடக்கு பிரதேச செயலகம் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

அத்துடன் மல்லாகம் சமுர்த்தி வங்கி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றது.

மேலும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி அலுவலர் சதீஸ்கரன் திருச்செல்வி தேசிய ரீதியில் அதி கூடிய சேமிப்பைப் பெற்றுக் கொண்டவர்களில் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

கொடி வாரம் மற்றும் சேமிப்பு வாரம் ஆகியவற்றில் 47 இலட்சத்து72 ஆயிரத்து 90 ரூபா சேமித்துள்ளனர். இந்த சேமிப்புப் பணம் முழுவதும் பொருண்மியம் நலிந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக செலவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-ரி-9)

## மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 07 . 1934

மறைவு 26 . 10 . 2023

### வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

பட்டிக்குடியிருப்பு. நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும். நட்டாங்கண்டல் மாங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை கடந்த (26.10.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சகுந்தலை தம்பதியினரின் பாசமிகு மருமகனும். காலஞ்சென்ற அன்னம்மாவின் பாசமிகு கணவரும். உதயகுமார் (கனடா). தங்கேஸ்வரி. ஜெகதீசன் (தபால் உத்தியோகத்தர். உப தபாலகம் - நட்டாங்கண்டல்). உதயசந்திரிக்கா (கனடா). ஜீவலதா (கனடா). சுரேஸ்குமார் (கனடா). ரமேஸ்குமார் (கனடா). மதிவதனி (கனடா). சசிகுமார் (கனடா). மேகலதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும். கிருபாரமணி (கனடா). காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் செல்வரஜனி (முகாமைத்துவ உதவியாளர் காணிப் பதிவகம் கச்சேரி - வவுனியா). யோகநாதன் (கனடா). சாந்தகுமார் (கனடா). தாட்சாயினி (கனடா). பிரபோதினி (கனடா). விஜயகுமார் (கனடா). பிருந்தா (கனடா). சத்தியகாமன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். காலஞ்சென்றவர்களான செல்லத்துரை. விநாசித்தம்பி நாகமணி. கந்தையா மற்றும் மகேஸ்வரன். சின்னம்மா. காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் தங்கமணி. காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும். சரஸ்வதி. தங்கராசா. ஸ்ரீஸ்கந்தராசா (முன்னாள் உப தபாலதிபர். உபதபாலகம். நட்டாங்கண்டல்) விக்னராஜா (கனடா). சூரியகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும். நிதிசரன். நிதுஷன். நிஷானி. நிலானி. திருமாறன். பத்மபிரியா (ஆசிரியை. மு/குமாரசாமி வித்தி.பாலிநகர்) செல்வசுதன். பிரகாஸ். அபிஷன். அனோஜன். கோபிநாத். துஷான். ராகவி. சதுர்ஷன். கனிகா. தினேஸ். விஷ்ணுகா. ஷார்னி. அபினயா. ஆகர்ஷன். நதிஷா. திரிஷா. சபினா. யஷிகா. டெபோரா. ஜோன். சாருஜன். கபினாஸ். மைஷா ஆகியோரின் அன்புப் பேரனும். கின்சிகா. ஹரின். சயனிகா. தினேஸ். கபின்ராஜ். யசோதரன். துஷாரா. ஷெரினா. ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நட்டாங்கண்டல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நட்டாங்கண்டல்,
மாங்குளம்.
077 986 1385

தகவல்:
கி.ஜெகதீசன் (மகன்)

(14723) (2.6)


யாழ்ப்பாணம், நெல்லியடி, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு
முள்ளியவளை, வவுனியா, திருகோணமலை,
மட்டக்களப்பு மற்றும் கல்முனையிலும்...

மேற்கத்தைய நாடுகளில்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

IELTS Academic / General Training
- மாணவர்கள் 6.5 band Score பெறுவதற்கு 100% உத்தரவாதம்.

Spoken English
Diploma in English
● முழுநேர / பகுதி நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

திருமணம் முடித்து UK செல்லவுள்ளவர்களுக்கு..
IELTS Life Skills A1
பாடநெறி முடிவில் 100% சித்தியடைவதற்கு உத்தரவாதம்

நெதர்லாந்து மொழிப் பாடநெறி DUTCH
ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி DEUTSCH
பிரான்ஸ் மொழிப் பாடநெறி FRENCH

BRITISH COLLEGE Of Education
More information 0777- 695605

23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
Yarl Rd, Jaffna. (off Stanly rd). Tel : 021-7284040

Vavuniya. 1. Tel : 024 -4930041
Nelliyady. Tel : 021-7284200
Kalmunai. Tel : 067-4300207
Kilinochchi. Tel : 021-4927114
Batticaloa. Tel : 011-4802486
Trincomalee. Tel : 011-4809245
Puthukkudiyiruppu. Tel : 01173-01173
Mulliyawalai. Tel : 0777-124074

IDP IELTS Exam centre


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
- புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்கட் என்பன மிக அருகாமையில்.

(Cs 25812) (N.1)

**077 755 1193**

# நிர்மாணத்திற்கான சிகிச்சையகம்
## Construction Clinic

நிர்மாணத் துறையில் ஈடுபட்டு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள எவரும் தத்தம் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பின்........

* குறைந்த செலவில் நிறைந்த வீடமைப்பதனால் ......
* கொடுப்பனவுகளை வழங்குவதிலும் பெறுவதிலும் முட்டுக்கட்டையா? .......
* நிர்மாண முகாமைத்துவத்தில் சிக்கல்களா? ......
* Luxury என்ற போர்வையில் வீடு கட்டத் தொடங்கி ஏமாற்றப்பட்டுவிட்டீர்களா? .....
* மேலும் நிர்மாண சம்பந்தமான வேறு ஆலோசனைகள் பெற விரும்பின்,

இதோ **இலவச ஆலோசனைச் சேவை**

**நடைபெறுமிடம் - 32 A, நிர்மாண மேம்பாட்டு மையத்தின் பயிற்சி பிரிவு, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**வாரநாட்களில் திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியிலிருந்து 5.00 மணி வரைக்கும் ஒரு நாளில் எட்டு பேருக்கு மட்டும்**

**முன்கூட்டியே பதிவு செய்யப்பட வேண்டும்**

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல : **021 222 5534** (கிழமை நாட்களில் **8.30 - 17.00** மணி வரை)

இன்றே பதிவு செய்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

குழுத்தலைவர்
நிர்மாண மேம்பாட்டு மையம்

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை

இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

(cr 37149)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

# SEEKING A WAREHOUSE IN JAFFNA

- Location : Jaffna town, Kopay center, or kondavil
- Size : 20,000 Sqft
- Land Area : 120 Perches
- Dock Doors : Minimum 2
- Roof Height : 6 m +
- Accessibility for 40 - footers
- Long - term Lease basis

Please Contact
Mahesh : 0741 400 954



CINEC CAMPUS
Beyond A Graduate

## தகமைச் சான்றிதழ் கற்கைநெறி பராமரிப்புச் சேவையாளர்களிற்கானது.
(பராமரிச் சேவை வழங்குவோர்க்கானது)

**NVQ LEVEL 03**

யாருக்கானது,

- சிறந்த தொழில் முறைரீதியாக பராமரிப்புச் சேவையை வழங்க விரும்புவோர்களுக்கு.
- தாதிய உதவியாளர் சேவையை வழங்க விரும்புவோர்.
- முதியோர் பராரிப்பு இல்லங்களில் வேலை வாய்பினைப் பெற விரும்புவோர்.

அனுமதிக்கான தகுதிகள்

- 35 வயதிற்கு குறைந்தோர்.
- கா.பெ.த(சா/த) – ஆங்கிலம் -C ஏனைய பாடங்களில -S A/L பரீட்சைகுத் தோற்றியோர்.
- CINEC இனது நுழைவுப் பரீட்சையில் 55 புள்ளிகளிற்கு மேல் பெற்றவர்கள்.

கற்றல் முறைமை

➜ விரிவுரைகள் - நேரடியாகவும் கலப்பு முறையிலும்
➜ பயிற்சி - நேரடியாக வைத்தியசாலைகளில்
➜ காலம் - 06 மாதங்கள்

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டது.

**Registrations Now Open**

071 8 051 252



# ருமேனியாவில் வேலை வாய்ப்புகள்

✦ சம்பளம் 500 யூரோக்கள் மற்றும் அதற்கு மேல் வழங்கப்படும்
✦ இடம் - Bucharest - ருமேனியா
✦ ஐரோப்பிய வாழ்க்கை முறை
✦ உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம்
✦ மருத்துவ வசதிகள் இலவசம்

- கட்டுமானத் துறையில் வேலை வாய்ப்புகள் (மேசன், தச்சர்கள், கம்பி பொருத்துபவர்கள், பிளம்பர்கள்)
- பைக் ரைடர் (Bike Riders)
- சுத்தம் செய்பவர்கள் (பெண்)
- சமையல் உதவியாளர்
- கட்டுமான தொழிலாளர்
- தொழிலாளர்கள் (பொது வேலைகள்)

AL/3507/0001/23

BI RECRUITMENT
Licence No 3507

# BI RECRUITMENT

0112 576 656 | 0776 929 773

இல. 250/3/06, 3[வது] மாடி, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, லிபர்ட்டி ப்ளாஸா.

www.birecruits.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமிக்க யாழ் மண்ணை செழிப்பாக்கிட

## ஜனசக்தி குழுமத்தின் முதலீட்டு நிறுவனமான First Capital உங்களுடன் கைகோர்க்கின்றது



- திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி
- பெருநிறுவன நிதியிடல் மற்றும் ஆலோசனை
- அலகு அறக்கட்டளைகள்
- கூட்டு நிதி மற்றும் ஆலோசனை
- தனியார் வள நிதி முகாமைத்துவம்
- பங்கு தரகர்

**எங்கள் யாழ் கிளை**

**No.173, Manipay Road, Jaffna.**

**077 007 3684 | 076 594 8632**

First Capital
A Janashakthi Group Company

JXG
JANASHAKTHI GROUP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

திருமதி

## பரமேஸ்வரி சுப்பிரமணியம்

புத்தூர் கிழக்கு புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (28.10.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசிங்கர் சுப்பிரமணியம் (முன்னைநாள் பிரதம உள்ளக கணக்காய்வாளர் - கச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற காசிநாதர் சரஸ்வதிப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் பவானி, புஸ்பதேவி (பிராந்திய நிர்வாக காரியாலயம் தபால் திணைக்களம் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயாரும் லோகநாதன் (ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர் - சுன்னாகம்) பாலபவான் (அதிபர் - சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி - மன்னார்) அவர்களின் அன்பு மாமியாரும் கோகுலன்; சாகித்தியன், தீபிகா, கஜானி, பிரார்த்தனா, பிரசாந், சாயிரூபன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை, விஜயலட்சுமி மற்றும் கனகரத்தினம், பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கிந்துசிட்டி இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**லோகநாதன் - 077 6053914**
**பாலபவான் - 077 7703776**

**புத்தூர் கிழக்கு,**
**புத்தூர்.**

(cr 40864 M-1)

# உயிரிழந்த யானையின் சடலம் நேற்று மீட்பு!



வவுனியா, ஒக். 29

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் இறந்த நிலையில் யானையின் சடலம் நேற்றுக் காலை மீட்கப் பட்டுள்ளது.

ஹொரவப்பொத்தானை காட்டுப் பகுதியில் இருந்து வீதி நோக்கி வந்த யானையே வீதி ஓரத்தில் இறந்துள்ளது. வீதியால் சென்றவர்கள் யானை இறந்து இருப்பதை அவதானித்ததையடுத்து பொலிஸார் மற்றும் வனஉயிரிகள் திணைக்களத்தினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து யானை இறந்தமைக் கான காரணம் தொடர்பில் வன உயிரிகள் திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ-110)

# 4ஆம் வருட நினைவு அஞ்சலி



| அன்னையின் மடியில் | | ஆண்டவன் பாதங்களில் |
|---|---|---|
| 06 . 10 . 1950 | அமரர் | 29 . 10 . 2019 |

## தில்லையம்பலம் துரைராசசிங்கம் (தாத்தா)

(திதி - ஐப்பசி மாத பூர்வபக்க துதியை-15.11.2023)

நான்கு ஆண்டுகள் நகர்ந்ததே...
நினைவுகளோ இன்னமும் வாழுகிறதே...
எங்கள் இதயங்களோ வலிக்கிறதே...
ஏக்கத்தில் நெஞ்சமோ தவிக்கிறதே...
உறங்காத கண்களோ நனைகிறதே...
ஊமையாய் உள்ளம் துடிக்கிறதே...
ஓடும் காலங்களும்கூட ஆற்றாதே...
ஓயாமல் எண்ணங்கள் மறையாதே...
தேடும் உறவினை எண்ணி வாடும் மனசுகள்...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'துவாரகா'
கதிர்காமசுவாமி கோவிலடி,
காரைநகர்.

பாசமுடன் மனைவி
பிள்ளைகள்: சுவாதி, பாரதி.

## பாடசாலைச் சேவை வாகன தரம் தொடர்பில் அவதானம்

கொழும்பு, ஒக்.29


பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்கள் தரமற்றவையாகக் காணப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்துப் பிரிவு பிரதம உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரங்கல தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பல வாகனங்கள் தரமற்றவையாகக் காணப்படுகின்றன.

இவ்வாறான வாகனங்களால் அநியாய உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தரமற்ற வாகனங்கள் மீது இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (எ-6)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 09 . 06 . 1937 | | 27 . 10 . 2023 |



## திருமதி நடராசா கமலாம்பிகை

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை நடராசா கடந்த (27.10.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் அப்புக்குட்டி நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குமாரு சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், திருமதி அப்புக்குட்டி குழந்தை தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் நாகம்மா, அமரர் பூபதி, சிவகுருநாதன், பூரணம், தங்கம்மா கோபாலகிருஸ்ஜன் ஆகியோரின் சகோதரியும், அமரர் ரேவதி, சோதி, சிவசோதி, ஜீவகுமார், புனிதவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், யேசுதாஸ், செல்வரத்தினம், தயாநிதி, கைலாயமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், சைலஜா, அஸ்ரின், சிந்துஜா, விமலதாஸ், ராஜீவ், றொபீனா, ரேணுஜா, சிவாஜீவ் - ஜானுஜா, வேணுஜா, அமரர் கிரிதரன், சிவசெல்வன் - வினோதா, சிவசீலன் - பிரியதர்சினி, சிவரஞ்சினி - தெய்வேந்திரா, கிஜானி - சுஜீவன், கிதான்சன், டக்சன், பத்மலோஜினி - மதிநிலவன், பிரசாந்தன்- நிவேதா, மகிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், அலெக்சனா, அஸ்விகா, கனிஸ்ரன், அனிஸ்ரன், நிசல்யா, டினுஸ்ஸா, சஞ்சய், மோனிஷா, சர்மிகா, ஜனுஸ்ரன், கோபிஷன், ஓமிஷா, அபினுசின், ஆதிரன், அக்சரன், அனன்யா, தனுஜன், பிரகீத் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**கல்வயல், சாவகச்சேரி.**

**தொடர்பு:**
**0777 175458, 077 550 3257.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 20 - 09 - 1974 | | 22 - 10 - 2023 |



## பரதன் இராமச்சந்திரன்

(90 O/L, 93 A/L Batch)

சாவகச்சேரி கோவில் குடியிருப்பு கச்சாய் வீதியை பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடா மார்க்கத்தை வதிவிடமாகக் கொண்டவருமான பரதன் இராமச்சந்திரன் ( 90 O/L, 93 A/L Batch Colombo Hindu College, Chavakachcheri Hindu College, Jaffna St. John's College, Colombo St. Thomas Mount Lavinia ) அவர்கள் கடந்த 22.10.2023 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராமச்சந்திரன் (ராசா), சந்திரபூபதி (ராணி) ஆகியோரின் புதல்வரும் சிவபாலன், மகேஸ்வரி (அனலை தீவு, அவுஸ்ரேலியா) ஆகியோரின் மருமகனும் சுஜாதாவின் அன்புக் கணவரும் நிவேன் ராமின் ஆசைத் தந்தையும் ரமணன் ( St.John's College) மயூரன் ( Chavakachcheri Hindu College)ஆகியோரின் அருமை சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.10.2023 சனிக்கிழமை 11 am - 3 pm வரை (Canadian Time) Chapel Ridge Funeral Home, Markham, Canada வில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (29.10.2023), 04 pm (Canadian Time) அளவில் இறுதிக் கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்**
பரணிதரன் (HND) 777809716
(மைத்துனன்)

**தொடர்புகளுக்கு**
இரமணன் 416 - 670 - 6467
மயூரன் 416 - 936 - 5200

cs26754 M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வு நடவடிக்கைகள் கடந்த செப்ரெம்பர் 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஒன்பது நாள்கள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் 17 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடந்த மாதம் 15ஆம் திகதி அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. அகழ்வுப் பணிகளை முன்னெடுத்த பேராசிரியர் ராஜ் சோமரட்ணவுக்கு நேரமின்மையால் தற்காலிகமாக அந்தப்பணி ஒத்திவைக்கப்பட்டது. நாளை 30ஆம் திகதி நீதிமன்றில் புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு மீள விசாரணைக்கு எடுக்கப்பட்டு அகழ்வுப் பணிகள் விரைவில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும் நவம்பர் மாதம் மூன்றாம் வாரம் அல்லது இறுதியிலேயே அகழ்வுப் பணிகள் ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவருகின்றது. (அ-ஒ-5)

## பௌத்தர்கள்...

அமைத்துள்ளீர்கள் என்று விகாராதிபதியிடம் கேள்வி எழுப்பியுள்ளனர். அதற்கு அவர் பதிலளிக்காமல் எழுந்து சென்றுவிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முன்னெடுத்துள்ள போராட்டத்தில் சிங்கள சிவில் சமூக அமைப்பினர் ஆதரவு தெரிவித்து நேற்றுப் பங்கேற்றிருந்தனர்.

காங்கேசன்துறை, தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும், தையிட்டி வாழ் மக்களும் இணைந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் முன்னெடுக்கப்பட்டிருந்த குறித்த போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக போராட்டம் இடம்பெற்று வரும் இடத்துக்கு நேற்றுக் காலை வருகை தந்த தென்னிலங்கையைச் சேர்ந்த காணி உரிமைக்கான மக்கள் அமைப்பைச் சேர்ந்த சிங்களச் சகோதர, சகோதரியினர் விகாரைக்குள் சென்று பொறுப்பான பௌத்த பிக்குவையும் சந்தித்தனர்.

அதன்போது குறித்த குழுவினரால் பௌத்தர்கள் வாழாத பகுதியில் எதற்கு விகாரை? தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணியில் ஏன் அமைத்தீர்கள்? எனக் கேட்கப்பட்டபோது பிக்கு எழுந்து சென்றுவிட்டார் என்று குறித்த தென்னிலங்கைக் குழுவினர் வெளியே வந்து கருத்துத் தெரிவித்தனர்.

பின் போராட்டக் களத்துக்குச் சென்று தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்துக்கு தமது தார்மீக ஆதரவையும் அவர்கள் தெரிவித்தனர். (அ-ஒ-66-100)

## விகாரையில்...

டன் முரண்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

தையிட்டியில் இராணுவத்தால் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரையில் நேற்று வழிபாடுகள் நடைபெற்றன. இதேவேளை - அருகிலுள்ள நாகதம்பிரான் ஆலயத்தில் பொங்கல் பொங்கப்பட்டு பக்திப் பாடல்கள் ஒலிக்கவிடப்பட்டிருந்தன. பாடல் ஒலியானது 'பிரித்' ஓதுவதற்கு இடையூறாக இருப்பதாகத் தெரிவித்து அதனை நிறுத்துமாறு பொலிஸார் முரண்பட்டனர்.

பொலிஸாருடன் முரண்பட்ட சட்டத்தரணிகளான ந.காண்டீபன், க.சுகாஷ் ஆகியோர், சட்டவிரோத விகாரையின் 'பிரித்' ஓதும் ஒலியை முதலில் நிறுத்துமாறு தெரிவித்தனர். இதன்பின்னர் 'பிரித்' ஓதும் ஒலி நிறுத்தப்பட்டதையடுத்து நிலைமை சுமுகமானது. (அ-ஒ-27)

## பாதீட்டுக்கு...

சரவை மறுசீரமைப்பொன்று இடம்பெறவுள்ளதாக பெரமுன தரப்புத் தகவல் கசியவிட்டுள்ளது.

பாதீட்டை நிறைவேற்றிக்கொள்வதற்கு பொதுஜன பெரமுனவின் ஆதரவு அவசியம் என்பதால் அந்தக்கட்சியைத் திருப்திப்படுத்தும் வகையில் சிலருக்கு அமைச்சுப் பதவியும், மேலும் சிலருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவுள்ளன என்று அந்தத் தரப்புகள் குறிப்பிடுகின்றன. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வாறானதொரு நிலைப்பாட்டில் இல்லை என்றும் கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் இருந்து சுகாதார அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டதாலும் சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களுக்குக் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டதாலும் மொட்டுக்கட்சி ஜனாதிபதி மீது அதிருப்தியில் உள்ளது. அத்துடன், நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் தமது தரப்புடன் கலந்துரையாடாமல் அமைச்சரவை மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறித்தும் மொட்டுக்கட்சி கவலை வெளியிட்டுள்ளது.

அதேவேளை, பாதீட்டை தோற்கடிக்க வேண்டுமானால் அதனையும் தமது கட்சியால் செய்யமுடியும் என மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் அறிவித்து வருகின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பாதீட்டுக்கு முன்னதாக மொட்டுக் கட்சியைத் திருப்திப்படுத்தும் வகையில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவுள்ளது என பெரமுன தரப்பு கதையொன்றை அவிழ்த்துவிட்டுள்ளது. (அ-ஒ-44)

## காஸாவில்...

வாக இலங்கையும் வாக்களித்துள்ளது. எனினும், இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா உட்பட 45 நாடுகள் ஆதரவு வழங்க மறுத்து, நடுநிலை வகித்துள்ளன.

இஸ்ரேல் - காஸா இடையே 20 நாள்களையும் கடந்து போர் நீடித்து வருகிறது. இதில் இஸ்ரேல் தரப்பில் சுமார் ஆயிரத்து 400 பேர் உயிரிழந்த நிலையில், காஸா நகரையே ஏவுகணைத் தாக்குதலால் உருக்குலைத்து வருகிறது இஸ்ரேல். இதனால் போரில் இதுவரை சுமார் 8 ஆயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் போர் நிறுத்தத்துக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை ஊடாக முயற்சிகள் எடுக்கப்பட்டன. ரஷ்யா கொண்டு வந்த இரண்டு தீர்மானங்களையும் தனது வீட்டோ அதிகாரம் மூலம் அமெரிக்கா தோற்கடித்தது. இதனால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேலின் நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க ஐ.நா. பொதுச்சபையில் அவசரக் கூட்டம் நடைபெற்றது.

இதில், மனிதாபிமானப் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி அரபு நாடுகளின் கூட்டமைப்பு சார்பில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீர்மானத்தில், இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும்விதமாக திருத்தம் செய்யவேண்டும் என்று அமெரிக்காவின் ஆதரவுடன் கனடா வலியுறுத்தியது.

ஆனாலும் கனடாவின் தீர்மானத்துக்கு ஆதரவாக 55 நாடுகளும், எதிராக 88 நாடுகளும் வாக்களித்த நிலையில் 23 நாடுகள் தீர்மானத்தைப் புறக்கணித்தன. திருத்தத்தை செயற்படுத்த போதுமான பெரும்பான்மை இல்லாததால், கனடாவின் தீர்மானம் நிறுத்தப்பட்டது.

இதையடுத்து காஸாவில் உடனடியாக போரை நிறுத்தும் தீர்மானம் ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக ரஷ்யா, சீனா, பிரேஸில், இலங்கை மற்றும் முஸ்லிம் நாடுகள் உட்பட 120 நாடுகள் வாக்களித்தன.

அமெரிக்கா, இஸ்ரேல், கனடா, நவ்று, பப்புவா நியூகினியா உட்பட 14 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா உட்பட 45 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. (அ-ஒ-44)

## மீண்டும்...

செய்தி வெளியிட்டுள்ளது. 2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இதில் செல்வந்த வரி அல்லது சொத்து வரியை அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஒவ்வொரு நபர்களினதும் சொத்துக்களை மதிப்பீடு செய்து, அதற்கமைய வரி அறவிடுவதை நோக்கமாகக் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது. நிதி, வங்கி வைப்பு, நிலையான சொத்துக்கள், காப்புறுதி மற்றும் ஓய்வூதியம், வியாபார நடவடிக்கைகள் உள்ளிட்ட தனிப்பட்ட சொத்துக்களை மதிப்பீடு செய்து வரி அறவிடுவது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த யோசனை சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2025 இல் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளபோதிலும், அரச வருமானம் குறைவடைந்துள்ளதால் அடுத்தவருடமே நடைமுறைப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

நபரொருவருக்கு உரித்தான வீடொன்று, வாகனமொன்று மற்றும் காணி ஒன்றுக்கு மேலதிகமாக, குறித்த நபருக்கு திரட்டப்படும் சொத்துக்கள் மீதே இந்த வரியை அறவிடமுன்மொழியப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்தும் விதம் குறித்து இன்னும் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை. இந்த வரி என். எம். பெரேரா நிதி அமைச்சராக இருந்தபோது அறிமுகப்படுத்தப்பட்டதென றும், பிரேமதாஸவின் ஆட்சிகாலத்திலேயே அது நீக்கப்பட்டது எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (அ-ஒ-44)

## கைதான...

வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றபோது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க இரு அணியினருக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இது தொடர்பில் இரு பகுதியினரும் வவுனியாபொலிஸில்செய்தமுறைப்பாட்டையடுத்து வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி உட்பட 7 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட 7 பேரும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 7 பேரையும் பொலிஸார் பிணையில் விடுவித்துள்ளதுடன், இணக்கசபையில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கையும் எடுத்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-ஒ-18)

## மன்னாரில்...

தலைமன்னார் கடற்பரப்புகளில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட 27 மீனவர்கள் விடுதலை செய்ய வலியுறுத்தி கடந்த 12 நாள்களாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று சனிக்கிழமை வேலை நிறுத்தத்தை தற்காலிகமாக முடிவுக்குக்கொண்டு வந்து மீன்பிடிக்கச் சென்ற நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மூன்று படகையும் அதிலிருந்து 25 மீனவர்களையும் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். (அ-ஒ-100)

## 14 வயது...

சிறுமி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சிறுமியை இருவேறு சந்தர்ப்பங்களில் இருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் முதல் சந்தேகநபரை நேற்றுமுன்தினம் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தொடர்ந்து சிறுமியுடன் தகாத உறவை வைத்துக்கொண்ட குற்றத்துக்காக மற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார். (ஒ-19)

சாவகச்சேரி
மாடி வீடு வாடகைக்கு
அரச மற்றும் தனியார் அலுவலகம் மெடிக்கல் கிளினிக் Higher Education Project Office போன்றவற்றிக்கு பொருத்தமான புதிதாக கட்டப்பட்ட மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு. சாவகச்சேரி Ladies College இற்கு அருகாமையில் மார்பிள் பதிக்கப்பட்ட 3000 சதுர அடி விசாலமுள்ள வீடு 2 விசாலமான வரவேற்பறை 6 அறைகள் 3 நவீன குளியலறைகள் உண்டு. தனியான பாதை வாகன தரிப்பிட வசதிகள் உண்டு
தொடர்புகளுக்கு
0771363597
0775959604
FORESIGHTS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நியாயமான விலை
பாதுகாப்பான சேவை

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

075 330 5500
077 302 5500

HEAD OFFICE:
976, K.K.S. ROAD, JAFFNA

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு
மன்னார், வவுனியா, திருகோணமலை
நீர்கொழும்பு, கொழும்பு

**குடும்பத்துடன் அமெரிக்காவில் குடியேற அரிய வாய்ப்பு!**



us lottery visa

நிபுணத்துவம் மிக்க சேவை

பதிவுகளுக்கு முந்துங்கள்


# மனித உடல் எச்சங்கள் கண்டுபிடிப்பு

மாதம்பே, பனிரெண்டாவ வனப் பகுதியில் மனித உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பொலிஸாருக்குக் கடந்த வியாழக்கிழமை மாலை கிடைத்த தகவலின் அடிப்படையில் மனித எலும்புக் கூட்டின் சிதைவுகள் மீட்கப்பட்டுள்ளன. மாதம்பே பனிரெண்டாவ பிரதான வீதியில் உள்ள வனப் பகுதியில் சுமார் 150 மீற்றர் தூரத்தில் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் சிலாபம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும், மாதம்பை பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-இ)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த France இல் வசிக்கும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளை எதிர்ப்பார்க்கின்றனர்.

தொடர்பு 070 722 2279

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் **24 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு. **நிலப்பரப்பு**
* 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* A-9 வீதியிலிருந்து 250 மீற்றர் தூரம்
* களஞ்சியம் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் ஏற்ற இடம்
* தரகர் தேவையில்லை.
* பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை.

**தொடர்பு:- 076 7558 606**
**077 6234 204**
**077 0760 389**

## கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**076 573 4507**

## தனியார் வகுப்புகள்

பொறியியலாளரினால் (BSc.Eng)
A/L **பௌதிகவியல்.**
**தரம் : 9 - 11 கணிதம்,** Auto CAD வகுப்புகள்
தனியாகவோ/ குழுவாகவோ/ வீட்டிலோ/ வீடு வந்தோ குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படும்.

**075 232 5325**

## வீடு வாடகைக்கு தேவை

இணுவில் / கோண்டாவில் மேற்கு பகுதியில் 4 அல்லது 5 பேர் தங்குவதற்கு வீடு வாடகைக்குத் தேவை.

CS 26735 (AK.1)

**077 104 1923**

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு தபால் பெட்டி வீதியில் நன்னீர் கிணறு மற்றும் மின்சார வசதியுடன் மூன்று பரப்பு காணி விற்பனைக்கு உண்டு பருத்தித்துறை பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர்

**076 6695590**

## வேலையாட்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல விருந்தினர் விடுதிக்கு முகாமையாளர் / வரவேற்பாளர் வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
**குறிப்பு : 40 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் ஓய்வுபெற்றோர் விரும்பத்தக்கது.**

**076 018 0926**




## ALLIANCE FRANCAISE DE JAFFNA

**af பிரெஞ்சு மொழி**

* யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
* அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
* தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
* French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சி பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்)



021 222 8093 17, Kandy Road, Jaffna

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரி No. 87 \ 01 A9 வீதியில் உள்ள பிரபல சூப்பர் மார்க்கட்டிற்கு வேலையாட்கள் தேவை
(Purchase Officer, Cashier, Helper)


**077 763 4074**

## வேலையாட்கள் தேவை

Lathe work, Welding work and Milling work ஆகிய வேலைகளுக்கு வேலையாட்கள் தேவை. வேலை தெரிந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். (மல்லாகம்)

**077 244 8216**


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 24 . 05 . 1946 |  | 26 . 10 . 2023 |

### ஆறுமுகம் தியாகராஜா

(பெரியகடை T.குமாரசாமி புடவையகம், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம், கமலேஸ்வரி புடவையக முன்னாள் ஊழியரும் நெல்லியடி தியாகராஜா அன் பிரதர்ஸ் உரிமையாளரும்)

வேலணை கிழக்கு, நாவலடிப்புலம் ஐந்தாம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கல்வியங்காடு மற்றும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறமுகம் தியாகராஜா (பெரியகடை T.குமாரசாமி புடவையகம், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் கமலேஸ்வரி புடவையக முன்னாள் ஊழியரும் நெல்லியடி தியாகராஜா அன் பிரதர்ஸ் உரிமையாளரும்) அவர்கள் கடந்த (26.10.2023) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சொர்ணம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரமலரின் அன்புக்கணவரும், சிவகுமார் (யாழ்ப்பாணம்).சிவதர்ஷினி (லண்டன்), காலஞ்சென்ற சிவந்தினி மற்றும் சுதர்ஷன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மணிமொழி (யாழ்ப்பாணம்), மோகனகுமார் (லண்டன), சுஜன்யா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியந்தன், வினுஜன், ஆருஜன், ஆரூஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், யோகராஜா, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜாமற்றும் பரமேஸ்வரி (ரதி), தங்கராஜா, காலஞ்சென்றவர்களான விஜயா, விஜயராஜா மற்றும் மோகனராஜா ஆகியோரின் சக உதிரத்தவரும், இந்திராணிமலர், ஜெயமலர், இரஞ்சிதமலர், செல்வமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின இறுதிக்கிரியைகள் இல 154, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம் இல்லத்தில் இன்று (29.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.154, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
**077 937 1846**
**077 653 7951** (cs.52641) N.1)

தகவல்
மனைவி - சந்திரமலர்
மகன் - சிவகுமார்
மகன் - சுதர்ஷன்
மகள் - சிவதர்ஷனி
சகஉதிரம் - தங்கராஜா


## "STUDY, MIGRATE & SETTLE IN AUSTRALIA"

A FREE INFORMATION SESSION ORGANIZED BY RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES, AUSTRALIA

**JAFFNA**
Hotel North Gate
3.30-5.30 P.M
31 October 2023

REGISTERED MIGRATION CONSULTANT
**THILINIKA WIJESINGHE** (MARA: 1463863 MIA: 8531)
*Reliance International Migration Services*
*Level 10. 14 Mason Street, Dandenong, VIC 3977 Australia*
*No 351/1 R A De Mel Mawatha, Colombo 03.*

WE PROVIDE ASSISTANCE WITH

STUDENT VISAS
SKILLED MIGRATION FOR ALL LISTED OCCUPATIONS
MANY OTHER VISAS

To Assess Your Eligibility, send us your CV to
**colombo@rimigrations.com**
by 30th October 2023
Contact 076 767 8281

## பெண் வேலை ஆட்கள் தேவை

நல்லூரில் அமைந்துள்ள புடைவைக் கடைக்கு அனுபவமுள்ள பெண் வேலை ஆட்கள் தேவை.
**முன் அனுபவம் : 2 - 4 ஆண்டுகள்**
**சம்பளம் : 30, 000 /-**

077 741 9511

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(CS26723)(J-1) **076 701 3060**

## Technicians / QS தேவை

Solar Technicians மற்றும் QS (A/L படித்தவர்களும்) உடன் தேவை

தொடர்பு : **077 3444 801**

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

**யாழ்நகரில் தனி வகுப்பு**
**ஆண்டு 7 to GCE OL, AL,**
**பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.**

K.Ganesh B.A **077 766 8725**

# விற்பனைக்கு

**கோழிப்பண்ணை அமைப்பதற்கான ஒரு வருடமே பாவனையில் இருந்த பொருட்கள் விற்பனைக்குண்டு**

**70 அடி நீளமும், 40 அடி அகலமும், 2750 - கோழிகள் வளர்ப்பதற்குரிய பண்ணை அமைப்தற்குரிய பொருட்களும், பண்ணையை சுற்றி வேலி அமைப்பதற்கான தகரங்கள் மற்றும் கொங்கிறிட் தூண்கள் விற்பனைக்குண்டு.**

இப்பொருட்கள் கோழிப்பண்ணை, Tution Center அல்லது களஞ்சியங்கள் அமைக்க உதவும். தகரம், கொங்கிறிட் தூண்கள், Gate, தண்ணீர் தொட்டி, Stand, Security Cameras, Water pump, கூட்டுக்குரிய நெற், அரிகற்கள், கோழித்தீவனம் மற்றும் தண்ணீர் வைக்கும் கொள்கலன்கள் அனைத்தும் முழுவதுமாக ஒருவருக்கே விற்கப்படும்.

**தேவை உள்ளவர்கள் மட்டும் அழைக்கவும்.**
**விலை : ரூ. 12,50,000 /- (விலை பேசி தீர்க்கப்படலாம்)**

இடம் : யாழ்ப்பாணம்

தொடர்பு : குமார் - 077 392 0797




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி

இரவெல்லாம் நிலவாகி எம்மீது வாரும்
இளந்தென்றல் இதமாயுன் இயல் ஏந்தி ஊரும்!
மரமெல்லாம் மலராகி மணமஞ்சமாகும்!
மயல் கொண்டு கருவண்டு புதுராகம் ஊதும்!

- மஹாகவி -

பக்கங்கள்: 08

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2053 | ஐப்பசி 12 | ஞாயிற்றுக்கிழமை (29.10.2023) | சிகரம் : 171


# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர்

○ அ.நிக்ஸன்

2009 மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்டு 14 ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில் சர்வதேச அரங்கில் ஈழத்தமிழர் விவகாரம் தொடர்ந்தும் பேசுபொருளாக இருக்கின்றது. ஆனால் புவிசார் அரசியல் பொருளாதார நிலைமைகளை ஆராய்ந்து அதற்கேற்ப நகர்வுகளை முன்னெடுக்கக்கூடிய தமிழ் அரசியல் கட்டமைப்புகள் ஒழுங்கான முறையில் இல்லை. குறிப்பாக ரஷ்ய- உக்ரைன் போர், இஸ்ரேல் - பலஸ்தீனியப் போர் ஆகிய புவிசார் அரசியல் பொருளாதாரப் போட்டிச் சூழலுக்குள் ஈழத்தமிழர்கள் மிக நுட்பமாகக் கையாள வேண்டிய திட்டங்கள் பல உண்டு. தற்போதைய உலக அரசியல் ஒழுங்கின் குழப்ப நிலைமையை இலங்கை உரிய முறையில் பயன்படுத்தி வருகின்றது.

இந்த நிலையிலேதான் அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார். தமிழ்த்தேசியக் கட்சிகள் குறிப்பாக 2001 இல் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயலிழந்து காணப்படும் நிலையில் ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாகப் பல கேள்விகள் எழுகின்றன.

குறிப்பாக தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், ரெலோ. ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட் ஆகிய இயக்கங்களை மையப்படுத்திய புதிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் எவ்வாறு, எந்தப் புள்ளியில் ஒன்று சேர்ந்து பயணிக்கவுள்ளன என்ற கேள்விகளும் நம்பிக்கையீனங்களும் விஞ்சியுள்ளன.

தமிழர்கள் யாருக்கு வாக்களிப்பது ?என்ற கேள்வி பல சிந்தனைகளையும் கவலைகளையும் தூண்டுவிடுகின்றது.

கொழும்பை மையமாகக் கொண்ட பிரதான சிங்களக் கட்சிகளின் எந்தவொரு வேட்பாளரும் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரங்களில் அக்கறை கொண்டவராக இருக்க வாய்ப்பில்லை என்பது பட்டறிவு.

அதுவும் 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் இலங்கையில் இனப்பிரச்சினை என ஒன்று இல்லை என்ற நிலைப்பாடு சிங்களக் கட்சிகள் அனைத்திடமும் உண்டு. சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சிங்கள ஊடகங்களும் அவ்வாறான கருத்துக்களையே முன்வைத்தும் வருகின்றன. இது "சிங்கள நாடு" என ஒரு பகுதியும் . இது "சிங்கள பௌத்த நாடு" என பெரும்பான்மையான சிங்கள மக்களும் கருதுகின்ற சூழலே சிங்களப் பிரதேசங்களில் மேலோங்கி வருகின்றன. இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு- கிழக்கில் உள்ள அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைந்து முரண்பாட்டிலும் உடன்பாடாகப் "பொதுவேட்பாளர்" ஒருவரை நிறுத்தி அவருக்கு வாக்களிக்குமாறு பிரசாரம் செய்ய வேண்டும்.

அனைத்துத் தமிழ் மக்களும் குறித்த தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வாக்களித்தாலும் இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் பிரகாரமும் அதன் தேர்தல் முறையின் மூலமாகவும் வெற்றிபெற முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆனாலும் வடக்கு- கிழக்குத் தமிழர்களின் ஒட்டுமொத்த வாக்குகளும் பொது வேட்பாளருக்குக் கிடைக்குமானால் "தமிழ்த்தேசியம்" என்ற நிலைப்பாட்டை சர்வதேச அரங்கில் நிறுவ முடியும். அத்துடன் பிரதான சிங்கள வேட்பாளர்களில் எவரும் ஜனாதிபதியாவதற்குரிய ஆகக் குறைந்தது 51 சதவீத வாக்குகளை பெறமுடியாத நிலை ஏற்படும்போது தமிழ்ப் பொதுவேட்பாளரின் வாக்குகளை சிங்கள வேட்பாளர் ஒருவருக்குப் பேரம் பேசி வழங்கவும் முடியும்.

**சந்திரிகாவில் இருந்து ரணில் , சஜித் வரையும் நம்பி ஏமாந்த பட்டறிவுகளின் பிரகாரம் பேரம் பேசக் கூடிய முறையிலும் தமிழ்த்தேசிய நிலைப் பாட்டை வெளிப்படுத் தும் உத்தியாகவும் பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டிய புவிசார் அரசியல் சூழல்**




ஆகவே இதனைப் புரிந்துகொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் , சிவில் சமூக அமைப்புகள் ,தமிழ் ஊடகங்கள் என்று பல்வேறு தரப்பினரும் ஒருமித்த குரலில் இப்போதிருந்தே செயலாற்ற வேண்டும்.

1994 ஆம் ஆண்டு சந்திரிகாவில் இருந்து 2010 இல் சரத் பொன்சேகா, 2015 இல் மைத்திரிபால சிறிசேன, 2020 இல் ரணில் - சஜித் கூட்டு என தொடர்ச்சியாக நம்பி வாக்களித்துத் தமிழர்கள் எதுவும் கண்டதேயில்லை.

கடந்த எண்பது வருட அரசியல் போராட்டத்தில் தமிழர்களுக்கு அழிவுகளும் ஏமாற்றங்களும் விஞ்சியுள்ள பின்னணியில் அவற்றைப் படிப்பினையாக எடுத்து, ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தி தமிழ்த்தேசிய நிலைப்பாட்டையும் சிங்களக் கட்சிகள் மீதான நம்பிகையீனங்களையும் உலகத்துக்கு வெளிப்படுத்த வேண்டிய நேரமிது.

பொய்யான, கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை வழங்கும் பிரதான சிங்களக் கட்சி ஒன்றின் வேட்பாளருக்கு வாக்களிப்பதால் எந்தப் பயனும் இல்லை என்பதை வரலாற்று ஆதாரங்களுடன் மக்களிடம் விழிப்பு ணர்வை ஏற்படுத்த வேண்டும்.

மாறாக ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதாலோ அல்லது யாரேனும் ஒரு சிங்கள வேட்பாளரை ஆதாரிப்பதாலோ எந்தப் பயனும் இல்லை.தமிழ் மக்கள் தங்கள் பொது வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களித்தால் அவருக்குரிய வாக்குகள் நேரடியாகவே எண்ணப்படும்.

உதாரணமாக தமிழ்ப் பொது வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களிப்பதாக இருந்தால் 1 என்ற இலக்கத்துக்கு முன்பாக அல்லது (X) வாக்களித்தால் மட்டும் போதும். வேறு வேட்பாளர்கள் எவருக்கும் விருப்பு வாக்களிப்பது பற்றித் தமிழ் மக்கள் யோசிக்க வேண்டிய அவசியமே இல்லை. தேர்தல் விதிகளின் பிரகாரம் பிரதான கட்சிகளின் இரு சிங்கள வேட்பாளர்கள் 51 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்றும் நிலை ஏற்பட்டால், நேரடியாகவே தமிழ்ப் பொது வேட்பாளரின் வாக்குகளைப் பொருத்தமான சிங்கள வேட்பாளருக்காகச் சேர்த்துக் கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக அறிவிக்க முடியும்.

இதனைக் கருத்தில் எடுத்து ஏனைய சிங்கள வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்களிக்கும் முறையை புகுத்தா மல், தமிழ்ப் பொது வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களியுங்கள் என்று தெளிவான முறையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரசாரம் செய்ய வேண்டும். அதே நேரம் ஐக்கிய தேசியக் கட்சி, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஶ்ரீலங்கா பொதுஜனபெரமுனக் கட்சி மற்றும் ஜே.வி.பி போன்ற சிங்களக் கட்சிகளின் தமிழ் முகவர்களும் வடக்கு- கிழக்கில் தத்தமது கட்சிகளின் வேட்பாளர்களுக்காகப் பிரசாரத்தில் ஈடுபடுவர். அத்துடன் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைச் சிதைத்து தமிழ் மக்கள் சிங்களக் கட்சிகளுக்கு அல்லது இலங்கை இராணுவத்துடன் சேரந்து இயங்கும் தமிழ் ஆயுதக் குழுக்கள் சார்பான சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்கக் கூடிய முறையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படக்கூடிய ஆபத்துக்களும் உண்டு. இவற்றையெல்லாம் முறியடித்து ஒருமித்த குரலாகத் தமிழ்த் தேசிய அரசியலை நிலை நிறுத்தக் கூடிய அளவுக்குப் பொது வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும்.



04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றவெளியில் திரண்ட சனங்கள்

நிலாந்தன்



இந்திய அமைதிகாக்கும் படையினரால் யாழ்.பொது மருத்துவமனையில் தமிழ்மக்கள் கொல்லப்பட்ட நாள் அது என்பதனால், சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியை வேறொரு நாளில் வைக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேட்டிருந்தது. அந்தக்கோரிக்கையை சந்தோஷ் நாராயணன் ஏற்கவில்லை. ஆனால் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் போரில் உயிர்நீத்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தினார். நிகழ்ச்சியில் ஈழப்போரைப் பிரதிபலிக்கும் பாடல்கள் பாடப்பட்டன. அப்பொழுது அங்கு கூடியிருந்த மக்கள் ஆர்ப்பரித்து அதைக் கொண்டாடினார்கள்.

அது ஒரு மழை நாள். அன்று பின்னேரம் மழை விட்டுத் தந்தது. முற்றவெளியில் கடந்த 15 ஆண்டுகளில் இதுவரை காணாத சன வெள்ளம். அந்த இடத்தில் இதற்கு முன் வர்த்தகக் காட்சிகள் நடந்திருக்கின்றன. அவற்றுக்கும் மக்கள் திரண்டு வந்தார்கள். ஆனால் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சிக்கு முன்னப்பொழுதும் இல்லாத அளவுக்கு சனம் திரண்டது. முனியப்பர் கோயிலுக்கு முன்னுள்ள வெளியிலும் சாலைகளின் இரு புறங்களிலும் வாகனங்கள் வரிசையாக நின்றன. பால் வேறுபாடு இன்றி, வயது வேறுபாடு இன்றி பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சி அது. பாடகர்கள் பாடப்பாட அங்கு கூடியிருந்த இளையோர் உற்சாகமாக ஆடினார்கள்.

அது தமிழ் மக்களின் கூட்டு மனோநிலையைக் காட்டியது. அவர்கள் கொண்டாட விரும்புகிறார்கள். கொண்டாடுவதற்கு கிடைக்கும் எந்த ஒரு தருணத்தையும் அவர்கள் இழக்க விரும்பவில்லை. பெருவிழாக்கள், பெருஞ்சந்தைகள் தொடக்கம் தனிப்பட்ட கொண்டாட்டங்கள்வரை மக்கள் ஆடிப்பாடி சந்தோசமாக இருக்க விரும்புகிறார்கள். அவர்கள் சன்னியாசிகள் இல்லை. இச்சைகளைத் துறந்தவர்கள் இல்லை. எனவே கொண்டாடுவார்கள்.

அப்படிப்பட்ட கொண்டாட்டங்களை எப்பொழுது ஒழுங்குபடுத்த வேண்டும் எப்பொழுது ஒழுங்குபடுத்தக்கூடாது என்பதனை தீர்மானிக்க முற்படும் கட்சி அல்லது மக்கள் இயக்கம் ஒன்றில், ஏற்பாட்டாளர்களுக்கு அறிவுறுத்தவேண்டும். அல்லது அங்கு திரளும் மக்களுக்கு அறிவுறுத்தவேண்டும். ஏற்பாட்டாளர்கள் கேட்கவில்லை என்று சொன்னால் தமது மக்களை அந்த நிகழ்ச்சியைப் புறக்கணிக்குமாறு கேட்க வேண்டும். ஆனால் அவ்வாறு தமிழ் மக்களை வழிநடத்தும் அளவுக்கு தமிழ்த் தேசியப்பரப்பில் ஒரு கட்சியோ மக்கள் இயக்கமோ இல்லை. அதாவது தமிழ்மக்கள் மத்தியில் பொதுக் கருத்தைத் திரட்டுமளவுக்கு சக்திமிக்க கட்சியும் கிடையாது; மக்கள் இயக்கமும் கிடையாது.

முதலாவதாக கட்சிகளிடம் 2009 க்குப் பின்னரான இளைய தலைமுறையின் கூட்டு மனோநிலையை வசப்படுத்தவல்ல பொருத்தமான ஒரு கலைத்தரிசனம் இருக்க வேண்டும். சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியில் பங்கு பற்றிய ஊடகவியலாளர் ஒருவர் என்னிடம் கேட்டார். "மக்களுடைய இக்கூட்டு மனோநிலையை கட்சிகள் விளங்கி வைத்திருக்கின்றனவா? மக்களை விடுதலைக்கான கலையை நோக்கி ஈர்க்கத்தக்க செயல் திட்டங்கள் எந்த ஒரு கட்சியிடமாவது உண்டா? எந்த ஒரு கட்சியிடமாவது கலை பண்பாட்டு இயக்கங்கள் உண்டா?" என்று. கலை இல்லாத ஒரு படை மந்தப் படை என்று சீனப் புரட்சியின் தலைவர் மாவோ சே துங் சொன்னார். "பண்பாடுதான் தேசிய விடுதலையின் திறப்பு" என்று ஆபிரிக்க அறிஞரும் சுதந்திரப் போராட்டத் தலைவருமான அமில்கார் கப்ரால் சொன்னார்.

ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் எல்லா விடுதலை இயக்கங்களிடமும் கலை கலாசார அமைப்புகள் இருந்தன. ஆயுதப் போராட்டம் தீவிரமடையத் தொடங்கிய காலகட்டத்தில் யாழ். பல்கலைக் கழகத்தில் மறுமலர்ச்சிக் கழகம் என்ற அமைப்பு இயங்கியது. அது விடுதலையை ஒரு மறுமலர்ச்சியாகப் பார்த்தது. பண்பாட்டு மறுமலர்ச்சி. அரசியல் மறுமலர்ச்சி.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் கலை ஒரு பிரிக்கப்படவியலாத பகுதியாக இருந்தது. பொங்குதமிழ் பேரெழுச்சிகளிலும் அப்படித்தான்.

ஆனால் கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் அரசியல் அரங்கில் காணாமல் போனவற்றின் பட்டியலில் கலை பண்பாட்டு இயக்கங்களும் சேர்ந்துவிட்டன. எழுக தமிழ்களுக்கு இசை இருக்கவில்லை; கலை இருக்கவில்லை.

பொங்குதமிழ் எழுச்சிகளை ஒழுங்கமைத்தவரும் அரங்கச் செயற்பாட்டாளருமான கலாநிதி சிதம்பரநாதன் கந்தர்மடத்தில் பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடம் என்ற பெயரில் ஓர் அமைப்பை நடத்தி வருகிறார்.

ஆனால் கட்சிகள் மத்தியில் அவ்வாறான கலை விளக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. தமது மக்களை தமது அரசியல் இலக்குகளை நோக்கித் திரட்டுவதற்குத் தேவையான கலைத்தரிசனம் எந்த ஒரு கட்சியிடமும் கிடையாது. சில பாடல்கள் சில நாடகங்கள் தவிர, கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் ஒரு பெரிய கலை வறட்சி நிலவுகிறது. கடந்த ஆண்டு நிகழ்ந்த 'கோத்தாகோகம' வின் கலை வெளிப்பாட்டோடு ஒப்பிடுகையில் இது பாரதூரமான வறட்சி.

ஓர் ஆயுதப் போராட்டத்தின்போது சமூகம் பெருமளவுக்கு மூடப்பட்டிருக்கும். அது காவலரண்களால் திட்டவட்டமாக மூடப்பட்டிருக்கும். ஆனால் போரில்லாத நாட்களில் அவ்வாறல்ல. குறிப்பாக போரில் தோற்கடிக்கப்பட்ட ஒரு சமூகத்தை எப்படித் திறப்பது? எங்கே திறப்பது? எதை நோக்கித் திறப்பது? என்பதனை போரில் வெற்றி பெற்ற தரப்பே தீர்மானிக்கின்றது.

கடந்த 15 ஆண்டுகளில் அவ்வாறு திறக்கப்பட்ட வழிகளின் ஊடாக நுண்கடன் நிதி நிறுவனங்கள் வந்தன. பிளாஸ்டிக் வியாபாரிகளும் அரும்பொருட்களைக் கவர்ந்து செல்வோரும் வந்தார்கள். போதைப்பொருள் வியாபாரிகளும் முகவர்களும் வந்தார்கள். கிரீஸ் மனிதன் வந்தான். குள்ள மனிதன் வந்தான். வேறு யார் யாரோ எல்லாம் வந்தார்கள். இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட ஒரு மக்களை எப்படிப் பண்பாட்டு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தோற்கடிப்பது என்று சிந்தித்து திட்டமிட்டு வெளியில் இருந்து பல்வேறு வகைப்பட்ட சக்திகளும் தமிழ்ச் சமூகத்தில் உட்பாய்ச்சப்படுகின்றன.

ஒரு காலம் இளையவர்கள் உன்னதமான இலட்சியங்களால் வழிநடத்தப்பட்டார்கள். ஆனால் இப்பொழுது அப்படியல்ல. இளையவர்களை எப்படி அரசியல் நீக்கம் செய்யலாம்? அவர்களை எப்படிப் போதைக்குள் மூழ்கடிக்கலாம்? அவர்களுடைய கைகளில் எப்படி வாள்களைக் கொடுத்து மோத விடலாம்? அவர்களுடைய நம்பிக்கைகளை; விசுவாசத்தை; கவனக் குவிப்பை எப்படி இடம் மாற்றலாம்? அவர்கள் மத்தியில் இருந்தே எப்படி முகவர்களை உருவாக்கலாம்? என்றெல்லாம் சிந்தித்துச் செயற்படுவதற்கு அரச பலமும் அரச வளங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அது ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்படுகின்றது; ஒருங்கிணைக்கப்படுகிறது. அது ஒரு பண்பாட்டுச் சிதைப்பு; ஒரு பண்பாட்டு நீக்கம். அதை எதிர்கொள்வதற்கு தமிழ்ச் சமூகம் தயாராக உள்ளதா? அதை குறித்து தமிழ்க் கட்சிகளிடம் பொருத்தமான அரசியல் கலைத் தரிசனங்கள் உண்டா?

இந்த மண் எங்களின் சொந்த மண் என்று பாடிய காலகட்டம் போய், இந்த மண்ணை விட்டு எப்படி வெளியேறலாம் என்று இளையவர்கள் சிந்திக்கும் ஒரு காலம் இது. வெளிநாட்டுக்கு போவதற்காக தங்களைத் தயார்படுத்தும் இளையோர் மத்தியில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாக அண்மையில் ஒரு மனநல மருத்துவர் சுட்டிக்காட்டினார். இது என்னுடைய நாடில்லை; இங்கே நான் இருக்கப் போவதில்லை, இருக்கின்ற கொஞ்ச காலத்துக்கு எப்படியும் இருந்துவிட்டுப் போகலாம் என்று சிந்திக்கும் ஒரு போக்கு அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். எப்படியும் இருந்துவிட்டுப் போகலாம் என்பதுதான் பண்பாட்டுச் சிதைவு. 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட பொழுது நாடாளுமன்றத்தில் கொல்வின். ஆர்.டி.சில்வா பின்வருமாறு சொன்னார் "…தமிழர்களை நீங்கள் அவமதித்தால்; கேவலமாக நடத்தினால்; துஷ்பிரயோகம் செய்தால்; ஒடுக்கினால்; அவர்களுக்குக் கரைச்சல் கொடுத்தால், அந்தப் போக்கின் விளைவாக சிலோனில் (இலங்கையில்) தனக்கென்று குறிப்பிட்ட ஒரு மொழியை, ஒரு பண்பாட்டைக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட அந்த இனத்துவ இருப்புக்குள் இருந்து ஒரு புதிய தேசியவாதம் எழுவதற்கு நீங்கள் காரணமாக அமைவீர்கள். இப்பொழுது அவர்கள் கேட்பதை விடவும் அப்பொழுது அவர்கள் அதிகமாக கேட்பார்கள். அதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டி வரும்"

அதாவது பலமான ஒரு பண்பாட்டை கொண்டிருக்கும் தமிழர்களை ஒடுக்கினால் வரக்கூடிய விளைவுகளை குறித்து அவர் எச்சரிக்கின்றார். அதுதான் உண்மை. தமிழ் மக்கள் ஆழமான பண்பாட்டு வேர்களைக் கொண்டவர்கள். கீழடி ஆய்வுகளின்படி தமிழ் வேர்கள் மேலும் ஆழத்துக்குச் செல்கின்றன. ஆழமான பண்பாட்டு வேர்களைக் கொண்ட மக்களை; மிகப் பலமான பண்பாட்டு நடுத்தர வர்க்கத்தை கொண்டிருக்கும் மக்களை; இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கடித்தாலும், அரசியல் ரீதியாக, பண்பாட்டு ரீதியாகத் தோற்கடிப்பது கடினம் என்பதைத்தான் கடந்த 14 ஆண்டுகள் நிரூபித்திருக்கின்றன. ஆயுதப் போராட்ட காலகட்டமும் கடந்த 14 ஆண்டுகளும் ஒன்றல்ல. மாறிவரும் தொழில்நுட்பச் சூழலை; மாறிவரும் அரசியல் பண்பாட்டுச் சூழலை; தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் விளங்கிக்கொள்ள வேண்டும். தமிழ் கூட்டு உளவியலின் மீது எப்படிச் செல்வாக்குச் செலுத்துவது? அதை அரசியல் நீக்கம் செய்ய முற்படும் சக்திகளிடம் இருந்து அதை எப்படிக் காப்பாற்றுவது? அதைப் பண்பாட்டு நீக்கம் செய்ய முற்படும் சக்திகளிடம் இருந்து எப்படிக் காப்பாற்றுவது? அதை விடுதலைக்கான பண்பாட்டை நோக்கி எப்படி வழி நடத்துவது?


கொல்வின். ஆர்.டி.சில்வா கூறியதுபோல தமிழ் மக்களின் தனித்துவமான பண்பாடுதான் தமிழ் மக்களை ஒரு தேசமாக வனையும் பிரதான மூலக்கூறுகளில் ஒன்று ஆகும். ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு தேசமாக வனையும் அம்சங்கள் ஐந்து. நிலம் அதாவது தாயகம்; இனம்; பொதுமொழி; பொதுப் பண்பாடு; பொதுப்பொருளாதாரம் என்பனவே அந்த ஐந்து மூலக்கூறுகளும் ஆகும். எனவே 2009 க்குப் பின்னரான பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்த விரும்பும் எவரும் அதன் தர்க்கபூர்வ விளைவாகத் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுகிறார்கள். அதை மறுவளமாகச் சொன்னால் தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்டாமல் கட்சிகளாகப் பிரிக்கும் எவரும் பண்பாட்டு விழிப்பை ஏற்படுத்த முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருத்துவர் பரா.நந்தகுமார்
பொதுச் செயலாளர், சைவ மகாசபை



(நேற்று நடைபெற்ற திருமந்திர மாநாட்டினையொட்டி இந்தக் கட்டுரை பிரசுமாகின்றது)

# திருமூலர் போற்றிய சிவபூமியும் திருவடி வழிபாடும்

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியான தாயிற் சிறந்த தயவான தத்துவனாகிய சிவப் பரம்பொருளை தொன்றுதொட்டு வழிபட்டு வருபவர்கள் சைவத்தமிழர்கள். உலகெங்கும் சிவவழிபாடு பரந்து காணப்பட்டாலும் இந்தியத் துணைக்கண்டத்திலே சிந்து நதி முதல் மகாவலி கங்கைவரையான நதிக்கரை நாகரிகங்களிலே சிவவழிபாட்டின் தத்துவார்த்தத் தனத்தின் தோற்றுவாயையும்பரிணாம வளர்ச்சியையும் தெளிவாகக் காணலாம். இந்தச் சிவ இலிங்க திருவடிவழிபாட்டுப் பாரம்பரியங்களிற்கு மிகப் பழமையான பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இருந்திருக்கின்றார்கள் என்பது பன்னாட்டு அறிஞர்களின் அகழ்வாராய்ச்சிகள் உறுதி செய்திருக்கின்றன.

சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட முந்துசிவனும், சிவலிங்கங்களும், தமிழின் முன்னோடி எழுத்துருக்களும் சைவமும் தமிழும் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு குறையாமல் பின்னிப்பிணைந்து வளர்ந்து வரும் வரலாற்றை எடுத்தியம்பும் சங்கம் கண்ட மூவேந்தர்கள் ஆண்ட தமிழகத்தின் வரலாறும் அதன் நீட்சியும் தொடர்ச்சியுமே என்பதை நாம் உய்த்து உணரலாம்.

உபகண்டத்தின் பெருநிலப்பரப்புக்கு தெற்கே தனித்துவங்களோடு மிளிர்கின்ற ஈழமணித் திருநாட்டின் திருமூலர் மிகத் துல்லியமாக சிவபூமி என வர்ணித்திருந்தார். மிகச் சிறப்பான அசைக்கமுடியாத அந்தக் கூற்றை சற்று ஆழமாகப் பார்ப்போமேயானால் இந்த அழகிய தீவின் வரலாற்றோடு சிவவழிபாடு எத்துணை ஆழமாக தொன்று தொட்டு பின்னிப்பிணைந்து இருந்திருக்கின்றது என்பதை அறியலாம்.

ஈழத்தின் அறியப்பட்ட முதல் மாமன்னனான இராவணன் மிகச் சிறந்த சிவபக்தன். தீவெங்கும் சிவலிங்கங்களை நிறுவியவன். அதனால் தான் சைவர்களின் மிக உயர்ந்த புனித சின்னமான திருநீற்றைவர்ணிக்கும்போது ஞானசம்பந்தர் 'இராவணன் மேலது நீறு' எனப் போற்றினார்.

விசயன் வந்தபோதே இங்கு பஞ்ச ஈச்சரங்களும் சிவவழிபாடும் இருந்ததை பாளி மொழிப் புனைவும் வரலாறும் கலந்த இலக்கியங்களே ஏற்றுக் கொள்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தத் தீவை 44 ஆண்டுகள் மிகச் சிறப்பாக ஆண்ட எல்லாளன் சைவத் தமிழ் மாமன்னன். பௌத்த மதம் இந்தத் தீவிலே அறிமுகப்படுத்தப்பட்ட போதுஅதனைத் தழுவிய தேவநம்பியதீசனுடைய தந்தையார் பெயர் மூத்தசிவன். சகோதரன் மகாசிவன். இராவணனின் தலைமைப்பட்டினமாக இருந்திருக்கக்கூடிய திருகோணமலை சிவ வழிபாட்டின் உச்சந்தொட்ட சிவபூமியாக பழமையான காலத்திலேயே இருந்திருப்பதற்கு பல ஆதாரங்கள் எச்சமாகஇன்றும் காணப்படுகின்றன. ஆம், சிந்துவெளி நாகரிகம் போன்று மகாவலி கங்கை, கடலைத்தொடுகின்ற திருகோணமலையின் கங்கு வேலியும் பண்டைத் தமிழரின் உச்ச நாகரிக வளர்ச்சியைத் தொட்டுக் காட்டி நிற்கின்றது. இங்குள்ள அகத்தியர் தாபன சிவன் கோவில் மிகப் பழமையானது. இதனோடு இணைந்த அகத்தியரால் நிறுவப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ், தத்துவ மெய்யியல்,சித்த மருத்துவம் என பல கலைகளைப் போதித்த பண்டைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் என நம்பப்படுகின்றது.

உலகிலுள்ள மதங்களில் திருவடி வழிபாட்டை மிகச் சிறப்பாக போற்றுகின்றதும் அதற்குரிய தனித்துவ மரபுகளைக் கொண்டிருப்பதும் சைவம். அதனால் அன்றோ சைவத்தமிழ் ஆதியாகமமாக விளங்குகின்ற திருமந்திரம் மிக அழகாக திருவடி வழிபாட்டைப் போற்றி நிற்கின்றது. இவ் வண்ணம் திருமந்திரம் பேசும் மகிமை நிறைந்த வழிபாடு இந்தச் சிவ பூமியிலே ஆதிகாலம் முதல் பயின்று வருவதில் வியப்பொன்றும் இல்லையல்லவா? ஆம், நம் ஈழமணித் திருநாட்டின் சிவனொளிபாதமலை அல்லது சிவனடிபாதமலை அமைந்திருப்பது சைவர்களுக்கே தனித்துவமான திருவடி வழிபாட்டோடு பொருத்திப் பார்க்க வேண்டியதாகும். ஆனால் இந்தத் தீவின் மரபுரிமைகளை மாற்றவிரும்பும் தரப்புகளால் அண்மையில் ஏற்படுத்தப்படும் திரிபுவாதச் செயற்பாடுகள் போன்று இடைக்காலத்தில் பலரும் இந்தத் திருவடிகளுக்கு உரிமை கோரி, பெயர்களை மாற்றி வழங்கும்வரலாற்றை அணுகி அராய்வோரால் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும். சிவனடி பாதத்தை கொண்டுள்ள சிவனடி மறவாச் சிந்தனையினராகிய வடக்கு - கிழக்கு, மலையகத்திலே செறிந்து வாழும் தமிழர் தமிழர்களிடையே பின்னாளில் பல சித்தர்கள் தோன்றி திருமூலரின் சிந்தனைகளை, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற ரீதியில் ஒன்றே குலமாக அன்பே சிவத்துக்கு உயிர் கொடுக்கும் ஆன்மிக சமுதாயப் பணிகளில் ஈடுபட்டனர். அவர்களில் யாழ்ப்பாணத்து கடையிற்சுவாமிகள், மாத்தளை பரமகுரு சுவாமிகள், கீரிமலை குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பலசுவாமிகள், மட்டு காரைதீவு சித்தானைக்குட்டி சுவாமிகள், நுவரெலியா குயின்ஸ்மேரி நவநாதச் சித்தர், நல்லூர் செல்லப்பா சுவாமிகள், கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள், சடையம்மா என மிக நீண்ட சித்தர் பட்டியல் இம் மண்ணுக்குரியது. இவர்களுடைய சமாதித் திருக்கோயில்கள் திருமூலர் காட்டிய நெறிமுறையில் ஈழத்தின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்டு திருவடி வழிபாடு இடம்பெறுவது சிந்தையைக் கவரும் உன்னத சைவத்தனிப்பெரும் நாயகன் நந்தி வகுத்து அளித்த நெறியின் அரும்பெரும் நீட்சியே. திருமூலர் வகுத்து அளித்த சைவசித்தாந்த மெய்யியலின் அருமையான திருவடிகளைப் போற்றும் மரபை திருவள்ளுவரும் தனது கடவுள் வாழ்த்திலே அடி தான் என்ற சொற் பதங்களூடாக குறள்மணிகளூடாக விபரிக்கின்றார்.

இதே போன்று ஊண் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும் ஒப்புயர்வற்ற திருவாசகத்தைத் தந்த மணிவாசகர் தனது சிவபுராணத்தின் தொடக்கத்திலேயே 'நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க' எனத் தொடங்கி தாள், அடி என்ற பதங்களை சிவபுராணத்தின் காற்பகுதி வரிகளிலே எடுத்தாள்கின்றார். ஆதலினால் இத்தகைய சைவத்தமிழர்களிடையே அருமையான திருவடி வழிபாட்டை மிக ஆழமாக அன்று முதல் இன்று வரை இந்தத் தீவில் அழகிய சிவபூமியில் பின்பற்றும் நாம் எம் குழந்தைகளுக்கு எம் முன்னோர் அளித்த அரும்பெரும் பொக்கிசங்களைக் கடத்துவோம். இந்தத் தீவின் சிவபூமியின் அடையாளங்களை தொன்மங்களைப் பாதுகாத்து, ஒன்றேகுலமாகி திருவடி மகிமை உணர்ந்து அன்பே சிவத்துக்கு உயிர் கொடுத்து அறநெறி பெருக்கி இன்புற்று வாழ்வோம்.

**ஊண் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும் ஒப்புயர்வற்ற திருவாசகத்தைத் தந்த மணிவாசகர் தனது சிவபுராணத்தின் தொடக்கத்திலேயே நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க எனத் தொடங்கி தாள், அடி என்ற பதங்களை சிவபுராணத்தின் காற்பகுதி வரிகளிலே எடுத்தாள்கின்றார்.**

*'திருவடி ஞானம் சிவம் ஆக்குவிக்கும்*
*திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்*
*திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்*
*திருவடி ஞானம் திண்சித்தி முத்தியே திருமந்திரம்'*

*'கற்றதனால் ஆய பயனின் கொள் வாலறிவன்*
*நற்றார் தொழார் எனின்'*
*'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்*
*மனக்கவலை மாற்றல் அரிது'*

*'வேண்டுதல் வேண்டாமை இல்லாமை சேர்ந்தார்க்கு*
*யாண்டும் இடும்மை இல'*
*'மந்திரம் ஆவதும் மாமருந்து ஆவதும்*
*தந்திரம் ஆவதும் தானங்கள் ஆவதும்*
*சுந்தரம் ஆவதும் தூய்நெறி ஆவதும்*
*எந்தை பிரான்தன் இணையடி தானே'*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

29 ஒக்ரோபர் 2023

# மரணத்தின் மறுபக்கம்

## பிணவறைத் தொழிலாளருடன் ஒரு நேர்காணல்



கிருஷிகா பாலரூபன்
ஊடகக்கற்கைத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.



மரணத்தின் பின்னாலுள்ள புதிர்களை நீக்கக்கூடிய இடம்தான் பிரேத பரிசோதனைக்கூடம். இறப்பின் உண்மையான காரணம் தெரிந்துகொள்ளச் செய்யப்படுவதே பிரேதப்பரிசோதனை. இது ஒரு சட்டம் சார்ந்த மருத்துவமாகும். இந்த உலகத்திலிருக்கும் எல்லா உயிரினங்களுக்கும் முக்கியமானது உயிர். அது பிரிந்தால் எல்லாமே பிரேதம் தான். இறந்துகிடக்கும் சொந்தங்களின் உடலைக்கூட தொட யோசிக்கும் உலகமிது. அதன் இரத்தம், சதை என இரத்தத்திலேயே ஊறி பூதவுடலிலிருந்து வெளிவரும் துர்நாற்றத்தைக் காற்றாகச் சுவாசித்து இந்த உலகத்தின் பார்வையில் படாமல் இருட்டு அறைக்குள் வெளிச்சம் தேடும் மனிதர்களைப் பற்றிய கதையே இது. யாழ்.போதனா மருத்துவமனையில் பிணவறையில் பணியாற்றும் ஒரு ஊழியர்( பெயர் தவிர்க்கப்பட்டுள்ளது)

நான் முதலில் சுகாதார உதவியாளராக சென்று பின் பிணவறைத்தொழிலாளராக வேலைக்குச் சென்றேன். நான் மருத்துவமனையில் என்ன பகுதியில் வேலைசெய்கின்றேன் எனக் குடும்பத்தவர்கள் அறிந்திருக்கவில்லை. பிணவறையில் பணியாற்றுகின்றேன் எனத் தெரியவருகையில் எதிர்ப்பு நிலை உருவானது. பின்பு என் நிலைப்பாட்டை எடுத்துக்கூற எதிர்ப்பு வலுக்கவில்லை. முதல் வருகையில் இப்படிதான் வேலை இருக்கும் எனத்தெரியாது. ஒருவித பய உணர்வு மேலோங்கியே இருந்தது. அதன் பின்னர் சிரேஷ்ட பணியாளர்களின் உதவியுடனும், அவர்களின் அனுபவம் மூலமும் பலவற்றைக் கற்றுக்கொண்டேன். ஓரிரு மாதத்திலேயே பழக்கப்பட்ட வேலையாக மாறிவிட்டது. என்னுடைய முதல் அனுபவமே உறவினர்களால் கைவிடப்பட்டு தனியாக வசித்து வந்த மாரடைப்பினால் இறந்து, நான்கைந்து நாள்கள் சென்ற பின் அயலவர்களால் ஒப்படைக்கப்பட்ட சடலமாகும். பின்னர் பெற்றுக்கொண்ட உடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனை செய்ய முற்பட்டும், அது இயலாத நிலையில் முதல் நாளே வேலையை விட்டுப் போய்விடலாமா? எனப்பல கேள்விகளுடன் மனம் அல்லாடியது. நண்பர்கள்தான் எனக்கு ஆறுதல்கூறி எப்போதும் இப்படியான நிலையில் உள்ள உடலங்கள் வராது எனத் தைரியப்படுத்தினர்.

### 4000 சடலங்களைக் கையாண்டுள்ளேன்

சாதாரணமாக இறந்தவர்கள, மாரடைப்பு, சயரோகம் போன்ற தொற்றா நோய்களால் இறப்பு, காய்ச்சல் போன்ற பக்ரீறியா தாக்கத்தால் இறத்தல் (நிமோனியா, மூளைக் காய்ச்சல்), தொற்று நோய், விபத்துகளால் இறத்தல், தூக்கிட்டு கொலை, தற்கொலை காரணமாக எரிந்த உடல், அடித்துக்கொலை செய்யப்பட்ட உடல், பாலியல் துஷ்பிரயோகம் செய்து இறத்தல்,கடலில் வீழ்ந்து கரையொதுங்கிய உடல், கர்ப்பிணித்தாய்மார் இறத்தல் (பிரசவத்தின் முன்பும் பின்பும்) நஞ்சருந்தி தற்கொலை செய்தல் (மருந்து, கிருமிநாசினி) என இதுவரைக்கும் விதவிதமான உயிரிழந்த சுமார் 3000-4000 உடலங்களைக் இதுவரை கையாண்டுள்ளேன். உடற்கூற்றுப் பரிசோதனை செய்வதிலேயே மிகக்கடினமாகத் தோன்றுவது உடல் எரிந்த நிலையில் நீண்ட நாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தோரின் சடலம், அழுகிய நிலையில் காணப்படும் உடலம் போன்றவைதான்.

### எப்படிச் செய்யப்படுகிறது உடற்கூற்றுப் பரிசோதனை?

நீதிபதி அல்லது திடீர் மரண விசாரனை அதிகாரியால் வழங்கப்படும் கட்டளைக்கு அமைவாக சட்ட மருத்துவ அதிகாரியினால் உடற்கூற்றுப் பரிசோதனை முன்னெ டுக்கப்படும். அந்த வேளையில் சுகாதார உதவியாளர்களாகிய நாம் உடலத்தை எடுத்து முதலில் இறந்தவரின் அடையாளப்படுத்தல் அட்டையை பார்த்து உறுதி செய்த பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனை முன்னெடுப்போம். அதன்பின் உடற்கூற்றுப் பரிசோதனை செய்யும் மேசைக்கு எடுத்துச் சென்ற பின்னர் உடலத்தின் உயரம், தலைமயிரின் நீளம், பற்களின் எண்ணிக்கை, ஆடையின் வகை, நிறம் என்பவற்றை ஆய்வு செய்து வெள்ளைப்பலகையில் எழுதுவோம்.

அதேசமயம் இறந்தவர் தூக்கிட்டு இறந்தவராக இருந்தால் கழுத்தின் சுற்றளவு தூக்குப்போட்ட அடையாளத்தின் அகலம், ஆழம், கயிறு, துணியின் முடிச்சு எந்தப் பக்கம் உள்ளது, என்ன வகையான முடிச்சுப் போடப்பட்டுள்ளது என்பதை எழுதிக்கொள்வோம். மேலும் இறந்தவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனும் சந்தேகம் எழும் பட்சத்தில் அவரது நகங்களை வெட்டி வலது, இடது எனப்பிரித்து அத்துடன் தலைமுடியையும் மாதிரிப் பரிசோதனைக்காக எடுத்துக்கொள்வோம். இறந்தவரின் உடலில் ஏதேனும் காயங்கள், எரிகாயங்கள்,துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள், அடிபட்ட தழும்புகள், கண்டல்கள் ஏதேனும் இருக்கும்பட்சத்தில் குறித்து வைத்துக்கொள்வோம். இதன்பின்னர்தான் உடற்கூற்றுப் பரிசோதனை செய்யத் தொடங்குவோம்.

பிணவறையில் மருத்துவருக்கு உதவியாக இருக்கும் பணியாளர்களின் உதவியுடனேயே மருத்துவர் கத்தியைக் கையாளுகின்றார். பிரேதபரிசோதனை செய்யும் மருத்துவர் சடலத்தை வெட்டிப்பார்த்து பரிசோதனையை மேற்கொள்வார். அப்போதுதான் மரணத்துக்கான உண்மையை ஆராய முடியும். பின்பு உடலுக்குள் இருக்கும் இதயம், இரைப்பை, ஈரல், நுரையீரல், சிறுநீரகங்கள் ஆகியவை வெட்டியெடுக்கப்படும். காவல்துறையினர் பிரேத கிடங்கில் பிணத்தை ஒப்புவிக்கும்போதே அவர்களின் மரண விசாரணையை அறிக்கையாக மருத்துவரிடம் அறிவித்து விடுவார்கள். இறப்புக்கான சரியான காரணம், நீண்டநாள் நோய் இருந்தால் திடீர் மரணவிசாரனை அதிகாரியினாலோ, விடுதிப்பொறுப்பு மருத்துவராலோ உடற்கூற்றுப் பரிசோதனை செய்யாமல் உறவினரிடம் நேரடியாகக் கையளிக்கப்படும். ஆரம்பத்தில வேலை செய்யும் போது பயம் இருக்கும். இப்போது அதுக்கு இடமேயில்லை. முழுமையான லீவுநாள்கள், வீடுவந்து சேரும் போதுதான் மகிழ்ச்சி என்ற ஒன்று ஒட்டிக்கொள்ளும்.

### பேயைக் கண்டு விலகிய ஊழியர்கள்

பேய் பற்றி நிறையப் பேர் கூறியிருக்கிறார்கள், ஆனால் என்னுடைய அனுபவத்தில் நான் காணவில்லை. சக ஊழியர்கள் சிலர் பேயைக் கண்டதாக வேலையிலிருந்து இடைவிலகிச் சென்றுமிருக்கின்றனர். மது அருந்தித்தான் உடற்கூற்று பரிசோதனை செய்யவேண்டுமென்ற கட்டாயமில்லை. நாம் அப்படி செய்வதுமில்லை. எனது பார்வையில் தற்கொலை என்பது மடமைத்தனமான செயற்பாடாகும். மனவிரக்தியெனின் சரியான உளநல ஆலோசனையைப் பெற்று மீண்டுகொள்ளலாமே ஒழிய முட்டாள்தனமாக தற்கொலை செய்துகொள்ளக்கூடாது. சாவு நம்மை தேடிவரவேண்டுமே தவிர நாம் சாவைத் தேடிச்செல்லக்கூடாது. இறைவனால் படைக்கப்பட்ட உயிரை மாய்ப்பதென்பது தகுதியற்ற செயலாகும்.

### கொரோனா ஒரு கொடுங்காலம்

கொரோனா ஆரம்பித்த பகுதியில் அது நமக்குப் பெரிய விடயமாகத் தெரியவில்லை. தகுந்த பயிற்சியானது மருத்துவ அதிகாரிகளால் ஒரு கிழமை வழங்கப்பட்ட பிற்பாடு அதனடிப்படையில் அதற்குரிய பாதுகாப்பு பொறிமுறையுடன் உடலங்களை பிணவறைக்கு எடுத்து வருவோம். பின்னர் தகனம் செய்வதற்குக் கூட நாமே செல்லவேண்டிய சூழல் இருந்தது. கொரோனா மரணங்கள் அதிகரிக்கையில் ஒருவித பயம் எம்மைச்சுற்றிக் காணப்படும். பின்னர் ஒரு நாளைக்கு 7-10 வரையான உடலங்களை எடுக்க வேண்டி நேரிட்டது. அதன் பின்னர் கடமையைச் செய்ய வேண்டுமென்ற உணர்வோடு கொரோனா உடலத்தை எடுத்து தகுந்த முறையில் குளிரூட்டியில் வைத்து தகனத்துக்காக அனுப்புவோம். பெருந்தொகையான இறப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அதாவது 20-30 உடலங்கள் இருக்கும் போது அடையாளம் காணுவது மிகவும் சிரமமாக இருந்தது. அத்தோடு இறந்தவரின் உறவினர்களுக்கு உடலத்தை கண்ணாடியூடாகக் காட்டும்போது உறவினர்கள் எம்மோடு வாக்குவாதப்படுவதும்,எம்மைத் தாக்க வருவதும் நாம் சந்தித்த பெரிய சவாலாகும் என்று தன் அனுபவத்தைச் சொல்லி முடித்தார் அந்தப் பணியாளர்.

எல்லா வேலைகளிலும் கடினம், சவால் என்பன உண்டு.. கஷ்டம், சகிப்புத்தன்மை, கொடூரம், சோகம், அழுகை, கதறல் என மனிதனின் மறுபக்கத்துடன் தொடர்புடையது இவர்களது வாழ்க்கை. அதுவே இவர்களின் வேலைக்கான அடிப்படைத்தகுதியும் கூட. குப்பையள்ளும் வாகனம் சென்றாலே மூக்கை மூடிச்செல்லும் நமக்கு அழுகிய பிணங்கள் உள்ள கிடங்கில் வேலைசெய்யும் இவர்களின் நிலை புரியாது. புரியவும் வாய்ப்பில்லை. நமக்குத் தெரிந்தவர்கள் இறந்துவிட்டாலே ஓரிரு நாட்கள் நமக்கான சிரிப்பு, மகிழ்ச்சி எல்லாம் நமக்குள் ஒளிந்துவிடும். தெருவில் மரணம் நிகழ்ந்தால் அந்தத் தெருவே சோகத்துடன் களை இழந்து காணப்படும். கண்முன்னே சாலையில் ஒருவர் விபத்தில் சிக்கி உயிர் அல்லாடிக்கொண்டிருந்தாலும் அவரை கண்டுங்காணாமல் செல்வதே இந்தச் சமூகத்தின் இயல்பு.

சவக்கிடங்கிலேயே சவங்களிடையே பொழுதைக் கழித்தாலும் ஓர் உயிரின் மதிப்பு நம்மை விட இவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். மரணம் என்றால் இவர்களுக்குள்ளும் ஒரு பயம் இருக்கும். தினம் தினம் பிரேதங்கள், மரண ஓலங்கள் என மரண சத்தத்தில் வாழும் இவர்களுக்கான சிரிப்பும் மகிழ்ச்சியும் ஆகாயத்தில் தோன்றும் அமாவாசை பௌர்ணமி போன்றதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



க.ருக்சஷாயன்
தரம் - 7B
வ/செட்டிகுளம் மகா வித்தியாலயம்



அ .யதிஷ்கா
தரம் - 2C
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை



அ .யதிஷ்கா
தரம் - 2C
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை



எஸ்.ஜக் ஷாஜினி
தரம் - 3A
சண்டுக்குழி மகளிர் கல்லூரி

மாணவர்களே!
நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.
அனுப்ப வேண்டிய முகவரி!
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555

# ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பொதுவேட்பாளர் தமிழ்த்தேசியக் கட்சிகளின் உறுப்பினராக அல்லது ஏதேனும் ஒரு தமிழ்க் கட்சியின் முக்கியமான பிரமுகராகவும் இருக்கக் கூடாது. கட்சி அரசியல் சார்பில்லாத, தமிழ்த்தேசியத்தை ஒருமித்த குரலில் செயற்படுத்தக்கூடிய மற்றும் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கக்கூடிய ஆற்றல்மிக்க ஒருவரையே பொது வேட்பாளராக நியமிக்கவேண்டும். கிழக்கில் இருந்து பொதுவேட்பாளர் தெரிவாவது தமிழ்த் தேசிய அரசியலுக்கு மேலும் ஆரோக்கியமானதாக அமையும்.


பொதுவேட்பாளர் நியமனத்தின் மூலம் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒரே கட்சியாக இயங்கவேண்டும் என்ற கோரிக்கைகள் அவசியமற்றவை. ஒவ்வொரு கட்சிகளும் தங்கள் தங்கள் நிலைப்பாட்டுடன் நாடாளுமன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு செயற்படலாம். தற்போதைய உலக புவிசார் அரசியல் - பொருளாதாரப் போட்டிச் சூழலுக்குள் தேர்தல் அரசியலும் முக்கியமானது என்ற கருத்தை மறுக்க முடியாது. இருந்தாலும் கட்சி அரசியல் செயற்பாடுகளுக்கு அப்பால் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை ஒருமித்த குரலாக முன்னெடுக்கக்கூடிய பொதுப்பொறிமுறை அல்லது தேசிய இயக்கம் போன்ற செயற்பாடுகளில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றித்துச் செயலாற்றக்கூடிய வியூகங்களை வகுக்கவேண்டும். மாறாக இனஅழிப்பு விசாரணைக் கோரிக்கைகள் மற்றும் சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை பற்றிய அழுத்தங்கள், கட்சி அரசியலுக்குள்ளும் தனிப்பட்ட கருத்துக்கள், அறிக்கைகள் அல்லது தனிப்படக் கடிதம் எழுதுதல் என்ற ஒருமித்த குரலற்ற வியூகங்களுக்குள் அமுங்கி விடக்கூடாது

2009 க்குப் பின்னர் 14 வருடங்கள் கடந்துவிட்ட சூழலில் கூட்டுச் செயற்பாடும் கூட்டுப் பொறிமுறையும் அவசியம் என்பதைத் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்தும் முயற்சியின் மூலம் தமிழ்த்தரப்பு உறுதிப்படுத்தவேண்டும்.

இந்தப் பின்புலத்துடன் "தமிழ்ப் பொதுவேட்பாளர்" என்ற முடிவு உறுதியானால், சிங்களக் கட்சிகளுக்கும் கொழும்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலருக்கும் அது கசப்பாக இருக்கும். இதனால் பிரித்தாளும் தந்திரோபாயங்கள் கொழும்பில் இருந்து கையாளப்படக்கூடிய ஆபத்துகள் உண்டு. வெளிநாட்டு தூதுவர்கள் அடிக்கடி வடக்கு-கிழக்குக்குச் சென்று வரும் நிலையும் உண்டு. யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதரகம் ஒன்றும் வியூகங்களை வகுக்கலாம். ஆகவே இவ்வாறான தந்திரோபாயங்களுக்குள் சிக்குப்படாமல், தற்துணிவோடும் சுயமரியாதையுடனும் ஒவ்வொரு தமிழ்த் தேசியக் கட்சிகளும் பொதுவேட்பாளர் விடயத்தில் செயற்பட வேண்டும்.

இல்லையேல் "தமிழ்ப் பொது வேட்பாளர்" என்ற சிந்தனையைக் கைவிடுவது நல்லது. ஏனெனில் தமிழ்த்தேசியப் பரப்பில் ஏற்கனவே உள்ள பலவீனங்களை அது மேலும் விரிவுபடுத்திவிடும் ஆபத்துகளும் இல்லாமலில்லை.

## சரியாக நிரப்புவோம்




# எலியும் பாலும்



பசி தாங்கமுடியாத எலிகள் இரண்டு தாங்கள் ஒளிந்திருந்த வீட்டின் சமயல் அறைக்குள் புகுந்தன. அங்கே ஒரு பெரிய பானை நிறைய பால் இருப்பதைக் கண்டன. ஆனால் அது உயரமான பானை. இதனால் பாலைக் குடிக்க முடியாமல் எலிகள் திண்டாடின.

இதையடுத்து இரு எலிகளும் ஒரு முடிவுக்கு வந்தன. ஓர் எலியின் மீது இன்னோர் எலி ஏறி பாலைக் குடிப்பது. அதன் பிறகு கீழே உள்ள எலி மேல் ஏறி பாலைக் குடிக்கலாம் என திட்டமிட்டு, அதை செயற்படுத்தின. அதன்படி மேலே உள்ள எலி பாலைக் குடித்த போது, கீழே இருந்த எலி கத்தியது: "போதும்! நான் பால் குடிக்க வேண்டும்..." கீழே இருந்த எலி போட்ட சத்தத்தை கேட்டு மிரண்டு மேலே இருந்த எலி, பால் பானைக்குள் விழுந்துவிட்டது. இதைக் கண்ட கீழே இருந்த எலி, "நல்லது, இனி எனக்குத் தான் எல்லா பாலும்" என்று நினைத்தது. பிறகு அந்தப் பானையைச் சுற்றி சுற்றி வந்தது. ஆனால் மேலே ஏற முடிய வில்லை. கடைசியில் பசியால் அது செத்துப் போய்விட்டது.

துன்பத்தில் இருந்து விடுதலை அடைய மற்றவர்களின் [illegible] தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஊர்காவற்றுறையின் உளூரறியாப்பக்கங்கள்



சுமித்தா தேவராசன்
3 ஆம் வருடம்
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நாற்புறமும் கடலால் சூழப்பட்ட இலங்கைத்தீவின் சப்த தீவுகளான அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு , நெடுந்தீவு, மண்டைதீவு, காரை தீவு(காரைநகர்) என்பவற்றில் அடுத்து வருவது தான் ஊர்காவற்றுறை. ஊர்காவற்றுறையானது வரலாற்றுச் சிறப்பு மிக்க பட்டினமாகவும் துறைமுகமாகவும் விளங்கியுள்ளது. ஆனால் ஊர்காவற்றுறையில் இப்படியொரு துறைமுகம் இருந்ததென்பதே பலருக்கும் தெரியாது.


ஊர்காவற்றுறைத் துறைமுகமானது வரலாற்றுக் காலங்களிலிருந்து வட இலங்கையின் பிரசித்தி பெற்ற துறைமுகமாக விளங்கியுள்ளது. இந்தியா,பர்மா போன்ற நாடுகளிலிருந்து வரும் வர்த்தகக் கப்பல்கள் தங்கிச்செல்லும் துறையாகவும் விளங்கியுள்ளதுடன் யாழ்ப்பாண இராச்சியத்தின் காவலரணாகவும் இது விளங்கியுள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்தத் துறைமுகம் 'ஊராத்துறை' 'ஊராந்தோட்ட' எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளது.


12 ஆம் நூற்றாண்டிலிருந்தே தீவுப் பகுதிகள் ஊடாக சர்வதேச வர்த்தகம் நடைபெற்றுள்ளது என்பதற்கு இங்குள்ள துறைமுகம் சான்றாக உள்ளது என தமிழகத்திலுள்ள கல்வெட்டுகளும், நயினை நாகபூசணி அம்மன் கோவிலிலுள்ள கல்வெட்டுகளும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. அந்த வகையில் வருமான அடிப்படையில் கொழும்புத்துறைமுகத்துக்கு அடுத்தபடியாக இலங்கையில் வருமானமீட்டும் இரண்டாவது பெரிய துறைமுகம் என்ற பெருமையை இந்தத் துறைமுகம் பெற்றிருந்தது.

ஊர்காவற்றுறையில் இத்தகைய துறைமுகம் காணப்பட்டதென்பதற்கான வரலாற்றுச் சான்றாதாரங்கள் இன்றும் காணப்படுகின்றன. ஊர்காவற்றுறைத் துறைமுகத்துக்கு அருகிலுள்ள சுங்கத்திணைக்களத்தின் எச்சங்கள் காரைநகர்க் கரையிலுள்ள 'சீநோர்' தொழிற்சாலை, பருத்தியடைப்பில் அமைந்துள்ள காக்கை வன்னியன் கோட்டை ,ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடைப்பட்ட ஆழமான கடற்பரப்பில் அமைந்துள்ள கடற்கோட்டை என்பன இந்தத் துறைமுகத்துக்கான சான்றாதாரங்களாகக் காணப்படுகின்றன.



துறைமுகத்துக்கு அருகிலுள்ள சுங்கத்திணைக்களக் கட்டடம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டதென தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் இந்தச் சுங்கத்திணைக்களக் கட்டடம், துறைமுகம் மூலமாகக் கொண்டுவரப்படும் பொருள்களுக்கு வரி விதிப்பதற்காக அமைக்கப்பட்டதோடு கடல் மார்க்கமாக நடைபெறும் கள்ளக் கடத்தல் செயற்பாடுகளைத் தடுக்கும் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வந்துள்ளது. காரைநகர்க் கரையிலுள்ள 'சீநோர்' தொழிற்சாலையானது நோர்வே அரசாங்கத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்டு இங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கியதோடு வெளிநாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் உள்நாட்டுப் படகுகள் என்பவற்றைப் பழுது பார்க்கும் செயற்பாடுகள் இந்தத் தொழிற்சாலை மூலமாக இடம்பெற்றுள்ளன.





துறைமுகத்துக்கான மற்றுமொரு சான்றாதாரமாக பருத்தியடைப்பில் அமைந்துள்ள காக்கை வன்னியன் கோட்டை திகழ்கிறது. இந்தக் கோட்டையானது காக்கை வன்னியன் என்னும் தமிழ் மன்னன் கரையோரப்பகுதிகளை ஆட்சி செய்த காலத்தில் ஊர்காவற்றுறைக் கடற் கோட்டைக்கு நேரெதிரே கட்டப்பட்டதாகும். இந்தக் கோட்டையானது முருங்கைக் கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட மிகவும் பலமான கோட்டையாகும். ஆனால் பிற்காலத்தில் ஆங்கிலேயர் இந்தக் கோட்டையைக் கைப்பற்றியதோடு அவர்களது பெரும் கப்பல்களையும் இங்கு நங்கூரமிட்டு வந்தனர். இங்கு துறைமுகம் காணப்பட்டமைக்கான மற்றுமொரு பலமான சான்றாதாரமாகக் காணப்படுவது ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையாகும். வட இலங்கையிலே ஐரோப்பியரால் அமைக்கப்பட்ட கோட்டைகளில் ஊர்காவற்றுறைக் கமன்கில் கோட்டையும் முக்கியமானது. இந்தக் கோட்டையானது பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக ஊர்காவற்றுறை - காரைநகரினைப் பிரிக்கும் ஆழமான கடற்பரப்பின் மத்தியில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டதாகும். எனினும் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர்கள் கைப்பற்றி ஆட்சி செய்தபோது இந்தக் கோட்டையை மாற்றியமைத்து தற்போதைய வடிவத்தினையும் பெயரினையும் வழங்கினர் எனக் கூறப்படுகிறது. ஐரோப்பியரது ஆதிக்கத்தின் சின்னமாகக் காணப்படுகின்ற இந்தக் கோட்டையானது முதன் முதலில் அமிநால் டெமன்சிஸ் என்ற போர்த்துக்கேயத் தளபதியால் 17ஆம் நூற்றண்டில் கட்டப்பட்டமைக்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்கிய ஊர்காவற்றுறைத் துறைமுகமானது பல்வேறு காரணங்களால் இன்று தன்னிலை இழந்து நிற்கிறது. ஆனால் அன்று காணப்பட்ட சிறப்புகளுடன் இன்றும் துறைமுகம் காணப்பட்டிருந்தால் [illegible]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடு மணல் குளிர்கிறது



சஞ்சீவி சிறுகதை

மகேசன் கஜேந்திரன்

108 அடி உயரமான கோபு
ரம்..'இன்னும் கம்பீரமாக
இருக்கிறேன் பார்த்தாயா?'
என் அவனைக் கேட்பது
போல இருந்தது.
முற்பகல் 10.00 மணி.காங்கேசன்துறை வீதியால் சென்று கொண்டிருந்த வாகனம் மேற்கு நோக்கித் திரும்பிக் கொள்ளவும் 'சிமென்ற் பக்டரி' சிறு தொலைவில் தெரிந்தது.
வாகனத்தை சடுதியாக நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டான் 'பவள்' என்கிற பவளகாந்தன்.
வழுக்கைத்தலை காலை வெயிலில் மினுங்கிக் கொண்டிருந்தது. பெரிய ' சண்கிளாஸ்'.
தடந்தோள்களில் பச்சை குற்றியிருந்தான். ஆனாலும் அவை துலாம்பரமாகத் தெரியவில்லை. அவனது நிறம் அப்படி.
நாடியில் சிறியதாடிக் குஞ்சம்.. 'ஓட்டைப் பானைக்குத் தேங்காய்ப் பொச்சு'அடைந்து சொருகியது மாதிரி இருந்தது.
வாகனம் அரை அடி மட்டில் தாழ்ந்து ஒரு அடி அளவில் உயர்ந்து கொள்ளவும் பவளகாந்தனின் மனைவியும் இறங்கிக் கொண்டாள்.
"இஞ்சருங்கோ.. கீரிமலைக்குப் போறதெண்டு சொல்லிப் போட்டு, இதிலை இறங்கி நிண்டு என்ன யோசிக்கிறியள்" என்றாள் ' மிஸ்ஸிஸ் பவள். இடி பாடுகளும் பற்றையுமாகக் காணப்பட்ட பழைய கடை ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தான் பவளகாந்தன்
பவளகாந்தனின் 'பிளாஷ்பக்' நுளம்புத்திரி போல சுருளத் தொடங்கியது.
1980 ஆம் ஆண்டுகளின் தொடக்கங்கள் பவளகாந்தன் ' சிமென்ற் பக்டரியில் 'தற்காலிக ஊழியனாக வேலை செய்து கொண்ட காலம்.
பக்டரிக்கு அருகில் சிறியதாக ஒரு அறையை வாடலகக்கு எடுத்துத் தங்கியிருந்தான். இடையிடையே தான் ஊருக்குப் போய்வருவான். மூன்று வேளைச் சாப்பாட்டுக்கும் அந்தக் கடைதான் தஞ்சம்.
பவளகாந்தனுக்கு.. ."பவள்" என்ற பட்டமளிப்பும் அந்தக் கடையில் தான் நிகழ்ந்தது.
அந்தக் காலம் இராணுவத்தினர் ஓடித் திரிந்த 'பவள் கவசவாகனம்' போன்று அவனது ஊதல் உடல்வாகும் இருந்ததால்'பவள்'என்ற பட்டப் பெயர் பலருக்கும் பிரசித்தமாக இருந்தது.
அந்தச் சாப்பாட்டுக் கடையிலும் தான் சரியான ஃபேமஸ் என்பான் அவன்.
சாப்பாட்டுக் கடையை நடத்திய குடும்பத்தின் கடைசிப் பெடியன்தான் "கவுண்டரில்" இருப்பான்.
அவன் பவளகாந்தனின் நண்பன் வேறு.
பவளகாந்தனின் கடன் கொப்பியில் 'பவள்'என்று பெரியதாக எழுதி.கவசவாகனம் மாதிரி ஒரு படத்தையும் வரைந்து வைத்திருப்பான் பவளின் அந்த நண்பன்.
"இதென்ன கோதாரி ?நாப்பது வருசத்துக்குப் பிறகு பழைய "றீல்" எல்லாம் இப்ப ஓடுது போல" என்றாள் மிஸ்ஸிஸ் பவள். பவள் குடும்பமாக இரண்டு தடவைகள் இலங்கைக்கு வந்து போயிருந்தாலும் கூட... அவ்வேளையில் இது விடுவிக்கப்பட்ட பிரதேசமாக இருந்திருக்கவில்லை.

● ● ● ● ●

பக்கத்தில் ஒரு நடுத்தர வயசாளி அப்போதுதான் கடையைத் திறந்து வியாபாரத்துக்கு ஆயத்தமானார்.
"தம்பி அஞ்சு கப்பல் பழம் தாருங்கோ"
கடைக்காரர் தனது வலக்கையால் இடது கை விரல்களை நெட்டி முறித்து விட்டுக் காசை இலாச்சிக்குள் போட்டுக் கொண்டார் "கைவியள யாவாரம் அண்ணர்" என்று சொன்னபடி.
பவள் கடைக்காரருடன் கதையைத் தொடுத்தான்.
"தம்பி..இவ்விடத்திலை 80 ஆம் ஆண்டுகள் மட்டில் ஒரு சாப்பாட்டுக் கடை இருந்தது. 'சிமென்ற் பக்டரி' வேலைகாரர் இங்கைதான் சாப்பிடுறவை. அந்தக் கடைக்கார ஆக்கள் இப்ப எங்ககை இருக்கீனம் ராசா?"
என்று கேட்கவும் அவர் . தான் 95 இடப்பெயர்வின் போது 'ஓ.எல் 'மாணவனாக வன்னிக்குச் சென்று. மணலாறு,முள்ளிவாய்க்கால் என்று உழன்று மீளவும் சொந்த ஊருக்கு வந்து சில வருடங்களாகத்தான் பழக்கடையை நடத்துவதாகவும் தழும்புகளைத் தடவியபடி,கூறிக் கொண்டார்.
அருகிலுள்ள ஆலயத்தில் குருக்கள் உட்பட பழைய ஆட்கள் சிலர் இருப்பதாகவும் அவர்களிடம் விசாரித்து அறிந்து கொள்ளலாம் என வழிப்படுத்தினார்.

● ● ● ● ●

ஆலயத்தின் புராதனம் புனிதமாக இருந்தது. ஏதோ பகல் உற்சவம் போலும். குருக்களும் உதவியாளர்களும் சுறுசுறுப்பாக இயங்கினர். வெளிநாட்டுக்காரரின் உபயமாக இருக்கக் கூடும்.வேறு எவரும் இருக்கவில்லை.
பவள் மேலாடையைக் களைந்து , பிடரியில் புடைத்திருந்த ஏரித்திரளைக்கும் விபூதியைப் பூசிக்கொண்டான்.
வசந்த மண்டபப் பூசையும் நிறைவுபெற்றது."பஞ்சபுராணம் அவதாரிய" என்று கூறிய குருக்கள்...'ஆரெண்டாலும் பஞ்சபுராணம் பாடுங்கோ' என்றார். கூடவே வந்திருந்த பவளின் இரட்டைப் பிள்ளைகள் பாடத்தொடங்கினர். அவர்களுடன் இணைந்து கொண்டான் பவளகாந்தனும்.
திருவண்ணாமலை.. திருப்பதி என்று அலைந்து தனது ஐம்பதாவது வயதில் பெற்றுக்கொண்ட பிள்ளைகள் தான் சிவந்தியும் முகுந்தியும் என்கிற 14 வயது இரட்டைச் சிறுமிகள்.
குருக்கள் விறைத்தே போய்விட்டார் ,பிள்ளைகளின் பண்ணைக் கேட்டு. சந்த வேறுபாடுகளைப் பிரித்து உணர்ந்து பவள் திருப்புகழ் பாடிய விந்தையைக் கண்டு சொக்கிப் போயினர் மற்றவர்கள். குருக்களின் கண்களில் நீர் திரண்டதைப் பவளும் கவனிக்கத் தவறவில்லை.
பவளின் தோற்றப்பாட்டை ஆரம்பத்தில் பார்த்த குருக்கள் தவறாக எடை போட்டிருப்பாரோ தெரியவில்லை. இப்போது தன் தீர்மானத்தையும் மாற்றியிருந்தார்.
வெளிநாட்டில் வாழும் எங்களுடைய சனங்கள்.. அங்கிருக்கும் அந்நியர்களுடன் இயைபாக்கம் பெறுவதற்காக மாற்றிக் கொண்ட உருமறைப்புக் கோலம்தான் புலம்பெயரிகளின் இத்தோற்றப்பாடோ என நினைத்துக் கொண்டார். ஆனாலும் பேசுகின்ற தமிழும் பாடிய பண்ணும் பூசிய விபூதியும் உருமறைப்பில் தோல்வி காணச் செய்கின்றன என்பதையும் குருக்கள் புரிந்து கொண்டார்.
அடிபாட்டுக் காலங்களில் வெளிநாடு சென்ற இளையவர்கள் இப்படியொரு உருமறைப்புக் கோலத்தில் மீள வருவது இன்றுவரை புத்திசாலித்தனம் என்று தீர்மானித்தார், யாரையோ நினைத்து.
குருக்கள் பவள் குடும்பத்தாருக்கு விபூதியை நெற்றியில் பூசி ஆசிர்வதித்தார்.
"தம்பி வெளிநாடோ? பிரான்ஸ் போல இருக்கு"
"ஓம் ஐயா .40 வருசத்துக்குப் பிறகு கோயிலடிக்கு வாறன். முகரியிலை அந்தக் காலம் சாப்பாட்டுக் கடை வைச்சிருந்தவையை விசாரிக்க வந்தனான் ஐயா "
கோயில் காரியாலயத்தில் கடமையாற்றும் இந்த ஊர் முதியவர்கள் இருவரிடமும் அறிந்து கொள்ளுங்கள் எனக் கூறிய குருக்கள் தனது அலுவல்களைத் தொடர்ந்தார்.

● ● ● ● ●

காரியாலயத்தில் ஊதுபத்தி வாசனை தூக்கலாக இருந்தது. இரண்டு பெரியவர்கள் இருந்தார்கள்.எழுபத்தைந்து வயதென்றாலும் இருக்கும் அவர்களுக்கு.
'றிசீட்' புத்தகத்தை வைத்திருந்த ஒருவர் அழகாக வரவேற்றார் பவளகாந்தனை.
"வாருங்கோ தம்பி வாருங்கோ!.. என்னத்துக்குப் பதிவு செய்யப் போறியள்? சண்முக அர்ச்சனையோ? பூசைப்பெட்டியோ? பொங்கலோ? அபிஷேகமோ இல்லாட்டி .. திருப்பணியோ..?' என்று கேட்டுக் கொண்டே.. றிசீட் தாளுக்குக் கீழாக காபன் தாளை சொருகிக்கொண்டார்.
"இல்லைப் பாருங்கோ..பழைய கடைக்கார ஆக்களைப் பற்றி விசாரிக்க வந்தனான்." என்று பவளகாந்தன் சொல்லவும். பெரியவரின் முகம் 'கட்டு அவிழ்த்த வலூன்' போல [illegible]
"பெரியவர். .நான் 40 வருசத்துக்குப் பிறகு இங்க வந்திருக்கிறன். எண்பதாம் ஆண்டு சிமென்ற் பக்டரியிலை......." என்று பேச்சை 'றீவைண்ட்' பண்ணிக் கொண்டு சாப்பாட்டுக் கடைக்காரரை விசாரித்தான் பவள்.
'ஓ!... அதுகளோ. இப்ப 'ஓஹோ' எண்டு இருக்குதுகள் ராசா. நூறு ..இருநூறு பேரெண்டு பக்டரி வேலைகாரருக்கு லாபத்தைப் பெரிசாப் பாக்காமல் பசியாத்தின குடும்பம் பாருங்கோ. ஷெல்லடி. .பொம்மர்.. பங்கர் எல்லாம் தாண்டி. .பிள்ளைகள் பேரப்பொடிகளோடை வெளிநாடுகளிலை நல்லா இருக்குதுகள்' என்று வயதானவருள் மற்றையவர் சொல்லிக் கொண்டார்.
'றிசீட்' புத்தகத்துடன் இருந்த பெரியவர் மீண்டும் தொடர்ந்தார்.
"சில நாய்கள் வருசக் கணக்காய் அவங்கடை கடையில திண்டு போட்டு... அந்தக் காலத்திலையே ஐநூறு ஆயிரம் எண்டு கடன் வைச்சிட்டு. கடைசி மாசக் காசையும் குடுக்காமல் ஓடிப்போட்டுதுகளடா தம்பி. அதில நல்லாப் புழங்கினதுகள் சிலது. ஏமாத்திப் போட்டு ஓடினதுதான் அதுகளுக்குக் கவலை " என்றதும். பவளுக்கு ஏதோ ஒன்று " சுருக் " கென்று கடித்தது போல இருந்தது. பவளின் வெறும் முதுகில் கொளுவிக் கொண்டு தொங்கியபடியிருந்த கொள்ளி எறும்பைப் பிடுங்கி எறிந்தாள் அவனது மனைவி.
"அவையளைத் தொடர்பு கொள்ள ஏதும் வழியிருக்கோ ஐயா? "
'ஏனில்லைத் தம்பி...கடையிலை கவுண்டரில் இருந்த இளையவன் கிளிநொச்சியில நிலபுலங்களோடை இருக்கிறான். உம்முடைய வயதுதானிருக்கும். ஒவ்வொரு பூரணைக்கும் அன்னதானம் போட இங்கை வாறவன். குடும்பம் சார்பாக ஒருவர் மாறி ஒருவரெண்டு ஒவ்வொரு பறுவத்துக்கும் அவனுக்குக் காசு அனுப்புங்கள் தம்பி. ஏழை பாளை சல்லிக்காரன் சாதிக்காரன் பாக்காமல் நிறையச் சனம் பசியாறுங்கள்..' என்றார் பெரியவர்
'இந்தமாதப் பறுவமும்.. ஐஞ்சாறு நாளிலை வரப்போகுது. இளையவன் வருவான் தம்பி அன்னதானசபைக்கு காசுகட்டுறதுக்கு' எனத் தொடர்ந்தார் பெரியவர்.
'ஐயா.. ஒரு விண்ணப்பம் வரப்போற பறுவத்துக்குரிய அன்னதானக் காசை நான் கட்டிறன்.ஏற்றுக்கொள்ளுங்கோ ஐயா.இதில் எண்பதினாயிரம் இருக்கு ஐயா. இதுவும் அவைக்குரிய காசு எண்டு வைச்சுக் கொள்ளுங்கோவன்.'றிசீட்டை' அவையளின்ரை பெயரிலை போடுங்கோ. என்ரை 'போன்' நம்பர்' இதிலையிருக்கு இளையவரிட்டைக் குடுத்து விடுங்கோ' என்று சொன்னவன் 'றிசீட்டையும் படமெடுத்துக் கொண்டான்.
'தம்பி..நீங்கள் ஆரெண்டு விளக்கமாகச் சொல்லுங்கோ.இளையவன் வந்தால் சொல்லுறன்"
"நாப்பது வருசத்துக்கு முதல் அவையின்ரை கடையில எக்கவுண்ட்டில் சாப்பிட்ட 'பவள்' என்கிற பவளகாந்தன் எண்டு சொல்லுங்கோ "
மனைவியும் பிள்ளைகளும் வாகனத்தை நோக்கி விரைந்தனர். உச்சி வெயில் சுடுமணலின் வெப்பம் தாங்காமல்.மூவரும் வெறுங்காலுடன் துள்ளித் துடித்து ஓடிக் கொண்டிருந்தார்கள்.
பவளகாந்தன் சுடுமணல் தரையில் அட்டாங்க நமஸ்காரம் செய்து கொண்டிருந்தான் மிக ஆறுதலாக.
அவனது வெறும் மேலுக்கு சுடுமணல் பொருட்டாகத் தெரியவேயில்லை. உள்மனம் குளிர்ந்து கொண்டிருந்தது.

● ● ● ● ●

வாகனம் ..கீரிமலையை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தது.
பவள் மனதில் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான் 400 ரூபாவுக்கு 10 சதவீத வட்டிப் படி 40 ஆண்டுகளில் எவ்வளவு தொகை கிடைக்குமென்று.
பவளின் மனைவி கேட்டாள்.
"இஞ்சருங்கோ...நீங்கள் அந்த நேரம் பக்டரி அயலிலை 'றூம்' எடுத்து இருந்தனியள் தானே?.. அந்த ஐயாவுக்கு ஏதாவது....?" என இழுத்தாள்.
அவன் அதற்கு..."அந்த ஐயா தானே ஒரு மாணிக்கத்தையே தந்துவிட்டுப் போயிருக்கிறாரே. என்னை மனுசனாக மாத்திக்கொள்ள" என்றபடி அந்த ஐயா மகளின் தோள்களைத் தழுவிக் கொண்டான் பவள் ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உணர்ந்தினம் 11

○ இராகவன்

பாகம் 2

போன கிழமை ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரரைப் பற்றிக் கொஞ்சம் சொன்னனான். இந்தக் கிழமை மிச்சத்தை பாப்பம் அவர் எங்கன்ட வகுப்புக்கு ஒருக்காலும் பாடமெடுக்கேல்ல. எண்டாலும் கன்னத்தைப் பொத்தி வாங்கியிருக்கிறன். ஒருக்கால் கொமர்ஸ் பாட நேரத்தில நடந்த ஓர் அசம்பாவிதம் இது. கொமர்ஸ் பாடமெண்டால் அது டபிள் பீரியட் தான். நான் 'சீ' வகுப்பெண்டு உங்களுக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறன். 'சீ' வகுப்புக்கும் 'டீ' வகுப்புக்கும் ஒண்டாத் தான் கொமர்ஸ் பாடம் நடக்கிறது.

அண்டைக்கும் அப்பிடித் தான் கொமர்ஸ் பாடத்துக்கு நாங்கள் 'டீ'வகுப்புக்குப் போனம். எங்களுக்கு ஒப்பிலாமணி ரீச்சர்தான் கொமர்ஸ் படிப்பிச்சவா. இவா ஆரெண்டால் கிட்டடியில நான் உங்களுக்கு மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் சங்கீதம் படிப்பிச்ச ரீச்சரைப் பற்றிச் சொன்னான் எல்லோ? அந்தச் சங்கீத ரீச்சரின்ரை தமக்கை தான் இந்த ஒப்பிலாமணி ரீச்சர். ஆனால் இவா சங்கீத ரீச்சருக்கு முத்திலும் எதிர்மாறான ஆள் . 'பச்சைத்தண்ணிப்பாவி மிதிச்ச இடத்துப் புல்லும் சாகாது 'எண்டெல்லாம் சொல்லுவினமே அதுக்கு முழுப் பொருத்தமான ஒரு சீவன். இப்படியான ரீச்சர்மார் பாடமெடுக்கேக்குள்ள பெடியள் எப்பிடி இருப்பாங்கள் எண்டது தெரிஞ்ச கதை தானே? அது தான் அண்டைக்கும் நடந்தது.

எங்கட வகுப்பில கோ.சசிகரன் எண்டு ஒரு பெடியன் படிச்சவன். ஆள் நல்ல வளர்த்திக்கு ஏற்ற உடம்பு. நாங்கள் எல்லாம் அவனைக் 'கோவன்னா' எண்டு தான் கூப்பிடுவம். அண்டைக்கு கொமர்ஸ் பாடநேரம். நானும் கோவன்னாவும் கடைசிமேசையளில தான் இருந்தனாங்கள். ஒப்பிலாமணி ரீச்சர் அண்டைக்கு வங்கிக்கணக்கிணக்கக் கூற்றுப் படிப்பிச்சுப் போட்டு, கணக்குச் செய்யத் தந்தவா. அந்தப் பாடம் வலு ஈசி. அதால அவா தந்த கணக்குகளையெல்லாம் உடனுக்குடன் செய்து காட்டிப்போட்டம் .

ஒப்பிலாமணி ரீச்சர் எல்லாப் பொடியளும் செய்து காட்டட்டும் எண்டுட்டு தன்ரை மேசையில போயிருந்து பாத்துக்கொண்டிருந்தா. நானும் கோவன்னாவும் சும்மாதானே இருக்கிறம் எண்டுட்டு நான். "எடுத்து நான் விடவா என் பாட்டைத் தோ...தோ.. தோ..தோழா !...."எண்டு பாடத்தொடங்கினன். கோவன்னா அதுக்கேத்தமாதிரி மேளமடிச்சான். கொஞ்ச நேரம் எங்கடை சமா வலு சுப்பறா நடந்திச்சுது. அந்த நேரம் கொமர்ஸ் பாடம் முடிஞ்சதுக்கான பெல்லும் அடிச்சது. எங்கடை கெடுகாலம் நோர்மலா வெளிக்கிட்டு வந்திருக்கலாம் .

அதைவிட்டுவிட்டு மேசைக்கு மேலால ஏறி விழுந்து வகுப்புக்கு வந்து சேர்ந்தம். அஞ்சு நிமிசங் கடந்திருக்காது. " டீ" வகுப்பிலயிருந்து ஒரு பொடியன் வந்து 'கோவன்னாவை ஜெபரத்தினம் சேர் வரட்டாம்' எண்டு சொன்னான். பிறகு எனக்கு அவரிட்டயிருந்து அழைப்பு வந்திச்சு .

(தொடரும்)

# பயங்கர சர்வாதிகாரிகள் உருவாகுவார்களா?

# மீண்டும் கடந்த காலப் பயங்கரங்கள் வேண்டாம்!

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு தரும் அச்சங்கள்!



○ குருமன்காட்டாள் வன்னிகா

இலங்கையில் இப்பொழுது இரண்டு சட்ட வரைவுகள் பற்றி அக்கறையுள்ள மக்களால் விவாதிக்கப்படுகின்றன. பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூல வரைவு மற்றும் ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூல வரைவு ஆகியவையே அவை.

இவ்விரு சட்டமூலங்களும் தனித்தனியே வெவ்வேறு நுட்ப உள்ளடக்கங்களையும் நோக்கங்களையும் கொண்டிருந்தாலும் மக்கள் ஒன்றுகூடி மக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தையும் அத்துடன் ஊடகங்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தையும் அதிகாரத் தரப்பினர் முற்றாக அடக்கக் கூடிய வாய்ப்புகளைக் கொடுக்கும் வகையிலானவை.

மேலும் இவ்விரு சட்டங்களும் அமுலாகினால் இலங்கை அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சகல அடிப்படை உரிமைகளும் அதிகாரத்தின் தேவைக்காக கட்டுப்பாடுகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் உட்படும் அபாயம் உள்ளது. மார்ச் 2023 இல் இலங்கை அரசாங்கம், 1978ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) இரத்துச் செய்யும் நோக்கில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைவு ஒன்றை வர்த்தமானியில் வெளியிட்டது.

அண்மைய பொருளாதார, அரசியல் நெருக்கடி காரணமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சீர்திருத்துமாறு சர்வதேச செயற்பாட்டாளர்களிடமிருந்து இலங்கை மேலதிக அழுத்தத்தை எதிர்கொண்டு வருகின்றது. பயங்கரவாதத்தை முறியடித்தல் என்ற பெயரில் இலங்கையின் அதிகாரத் தரப்புகள் வழமையாக உரிமைகளை துஷ்பிரயோகம் செய்வதை இலகுபடுத்தும் கொடுமையான சட்டமொன்றாக பயங்கரவாதத் தடைச் சட்ட வரைவு அமைந்துள்ளது என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

சர்வதேச சட்டங்களின் கீழ் மனித உரிமைகள், குடியியல் சுதந்திரங்கள், அத்துடன் மிகவும் குறிப்பிட்ட வகையில் ஒன்று சேர - ஒருங்கிணைய - மற்றும் கருத்து வெளிப்படுத்துவதற்குள்ள சுதந்திரங்களைப் பாதுகாக்க இலங்கை கொண்டுள்ள கடப்பாடுகளுக்கு இணங்கியொழுக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தவறியுள்ளது என மனித உரிமைச் சட்டத்தரணிகளும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் வரைவிலுள்ள பிரச்சினைக்குரிய அம்சங்கள் வருமாறு-

பயங்கரவாதத்துக்கு வழங்கப்பட்டுள்ள தெளிவற்ற வரைவிலக்கணங்கள் குடியியல் சுதந்திரங்களை மட்டுப்படுத்துவதுடன் எதேச்சதிகாரமான அமுல்படுத்தலுக்கு வழிவகுக்கின்றன.

1. இடங்கள், வீதிகளை மூடவும், ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தவும், நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், ஒன்று கூடல்கள், பேரணிகள் மற்றும் ஏனைய நிகழ்வுகளைத் தடைசெய்யவும் பொலிஸ் அல்லது ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள தேவைக்கதிகமான பரந்த அதிகாரங்கள் சுதந்திரத்தை மீறும் விதத்தில் உள்ளன.
2. பரந்தளவில் தகவல் சேகரிப்பது அந்தரங்கம் மற்றும் வெளிப்படுத்தல் சுதந்திரம் போன்ற உரிமைகள் மீறப்பட வழிவகுக்கலாம்.
3. நிறுவனங்களைத் தடை செய்தல், தனி நபர்களுக்கு கட்டுப்பாட்டு ஆணைகள் பிறப்பிக்கப்படல், சொத்துக்களை பறிமுதல் செய்தல் மற்றும் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல் என்பனவற்றுக்கான இயலுமை, ஒருங்கிணைவதற்கான சுதந்திரம் மற்றும் ஏனைய உரிமைகளை தடுப்பனவாக உள்ளது.
4. மரண தண்டனை, பல வருட சிறைத் தண்டனைகள் மற்றும் பெருந்தொகையான தண்டப்பணம் உள்ளடங்கலாக தீவிரமான தண்டனைகளை இந்தச் சட்டமூலம் உள்ளடக்கியுள்ளது. இவை அபாயகரமானவை மற்றும் நியாயப்படுத்தப்பட முடியாதவை.

இலங்கையின் அரசியல் யாப்பு மக்களின் இறைமையியல் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. அரசியலமைப்பின் உறுப்புரை 3 பின்வருமாறு கூறுகிறது. 'இலங்கைக் குடியரசில் இறைமை மக்களிடம் உள்ளது. மற்றும் அதன் பிரிக்க முடியாத இறைமை என்பது அரசாங்கத்தின் அதிகாரங்கள் அடிப்படை உரிமைகள் மற்றும் உரிமையை உள்ளடக்கியது. அத்தோடு சட்டப்பிரிவு 4(ஏ), 4(பி) மற்றும் 4(சி) யில் நாடாளுமன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதித்துறை ஆகியனவற்றின் மூலம் மக்களின் இறைமையை எவ்வாறு செயற்படுத்துவது என்பது பற்றி குறிப்பிட்டுள்ளது. 4(டி) மற்றும் 4(ஈ) யில் இலங்கை அரசியல் அமைப்பில் பொதிந்துள்ள இறையாண்மைக் கருத்தின் ஒரு அங்கமாக அடிப்படை உரிமைகள் மற்றும் உரிமைகள் உள்ளன.

முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இந்த நிலைப்பாட்டை மிக அடிப்படையான முறையில் மீறுவதாகவும் மாற்றுவதையும் நோக்கமாகக்கொண்டுள்ளதை அடிப்படை அரசியல் விஞ்ஞானம் தெரிந்தவர்களால் கூட இலகுவில் விளங்கமுடியும்.

'பயங்கரவாத எதிர்ப்பு' என்ற ஒரே குடையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள பல விடயங்களை ஜனாதிபதியே கையாள்வார். தேர்தலை நடத்துவது அல்லது நடத்தாமல் இருப்பது அமைதியான போராட்டங்களை நடத்துவதற்கான உரிமை, அமைதியாக ஒன்றுகூடும் உரிமை, பத்திரிகைச் சுதந்திரம், சட்டவிரோதக் கைது, சட்டவிரோதமாக தடுப்புக் காவலில் வைப்பது போன்ற விடயங்களில் இந்தச்சட்ட மூலம் அமுலுக்கு வந்தால் தனி நபர் சுதந்திரம் இழக்கப்படும். இவ்விடயங்கள் தொடர்பான நாடாளுமன்றத்தின் அனைத்து மேற்பார்வைச் செயற்பாடுகளும் ஜனாதிபதியால் நேரடியாகக் கட்டுப்படுத்தப்படும். முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இலங்கையின் குற்றவியல் நடைமுறைக் கோவையை முற்றிலுமாகப் புறக்கணித்து, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு இணையான குற்றவியல் நடைமுறைமையை நிறுவ முயற்சிப்பதாகும். இவ்வாறு இலங்கையில் இரண்டு வகையான குற்றவியல் நடைமுறைகள் நிறுவப்படும். குற்றவியல் நடைமுறைக் கோவையைப் பின்பற்றி தங்கள் கடமைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளிடமிருந்து அனைத்து அதிகாரங்களும், பொதுமக்களுக்கான அனைத்துப் பாதுகாப்பும் இந்தச்சட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் அல்லது பொலிஸ்மா அதிபர் ஊடாக ஜனாதிபதியால் பறிக்கப்படும்.

இருளுக்குள்ளும் வாழ்வின்மைக்குள்ளும் தள்ளப்படுகிறார்களா இலங்கை மக்கள்?

மீண்டும் கடந்த காலப் பயங்கரங்கள் வேண்டாம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org